# நேற்று நடந்த ரயில்சேவையும் இன்று ரத்து

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 295
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கார்த்திகை 20 நம்ழான் 24 வெள்ளிக்கிழமை [5-12-69]




பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

நத்தார் - புதுவருடத்தை
முன்னிட்டு
உயர்ந்தரக
ஜவுளி வகைகளும்
கண்கவர் டிசைன்களில்
றெடிமேட் உடுப்புகளும்
ரெர்லின், நொண்ணயன்,
கொட்டன் சேட் வகைகளும்
மிகவும் மலிவான விலைகளில்
பெற்றுக்கொள்ளலாம்.
கணேசானந்தாஸ்
208, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

## வேலை நிறுத்தம் தொடர்கிறது

யாழ்ப்பாணம் வெள்ளி

காங்கேசன்துறைக்கும் அனுராதபுரத்திற்கும் காங்கேசன்துறைக்கும் பளைக்கும் நேற்று நடந்த நான்கு புகையிரதசேவை இன்று ரத்து செய்யப்பட்டுள்ளதாக புகையிரத அதிகாரி ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார்

இன்று சரக்குவண்டிகள் மட்டும் சேவையில் ஈடுபடுமென்றும் மற்றைய வண்டிகளின் சேவைபற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டிக்கு செல்லும் கடுகதி பஸ் காலை 5-20 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுமென்றும் அனுராதபுரத்திற்கு செல்லும் பஸ் காலை 6-45 மணிக்கு புறப்படுமென்றும் இ. போ. ச. யாழ். டிப்போ அதிகாரி ஒருவர் தெரிவித்தார் பிரயாணிகள் கூடுதலாக இருந்தால் மேலதிக பஸ் சேவைவிடப்படுமென்றும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு நேரடியான பஸ்சேவையில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அத்தியாவசிய பொருட்கள் செல்கின்றன

கோட்டை வெள்ளி

ரயில் என்ஜின் சாரதிகளினதும் கார்டுகளினதும் வேலைநிறுத்தம் நான்காவது நாளாகத் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதேசமயம் மட்டுப்படுத்தப் பட்ட ரயில்சேவை சில இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் மேலும் சில மாகாணங்களுக்கு அத்தியாவசியப் பொருள்களுடன் இன்னும்சரக்கு வண்டிகள் புறப்பட்டுச் சென்றதாகவும் அரசாங்க உயர்தர அதிகாரியொருவர் தெரிவித்தார்:

கொழும்பு நகரில் வேலைபார்க்கும் ஊழியர்களின் வசதியை முன்னிட்டு கொழும்பு கோட்டையிலிருந்து அளுத்கமை, போலவத்த, பொல்காவல ஆகிய இடங்களுக்கும் வியாங்கொடைக்கும் இன்றுமாலை ரயில் சேவை நடைபெற்றதாக ரயில்வே அதிகாரியொருவர் கூறினர்:

கல்லோயாசந்தி, அவிசாவளை, புத்தளம், நாவலப்பிட்டி, இரத்மலானை ஆகிய இடங்களுக்கு இன்று மேலும் அத்தியாவசியப் பொருள்களுடன் சரக்கு வண்டிகள் புறப்பட்டுச் சென்றதாக ரயில்வே அதிகாரியொருவர் தெரிவித்தார் கொழும்பு நகர் புறப்பகுதியில் இ. போ. சபை பஸ் சேவை மேலதிகமாக துரித கதியில் நடைபெறுவதாக இ. போ. சபை அதிகாரி யொருவர் கூறினர்.

# யாழ். மாவட்டத்தில் ஒன்றரைலட்சம் ஏக்கர் நிலத்தில் உப உணவுப்பயிர்

## ஜி. ஸி. ஈ. பரீட்சை

### 14- திகதி ஆரம்பமாகும்

### அனுமதிப்பத்திரம் இன்று வருகிறது

யாழ்ப்பாணம், வெள்ளி

இம்மாம் 14ந் திகதி ஆரம்பமாகும் ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சை ஏற்கனவே திட்டமிட்டபடி நடக்கும். வடபகுதிப் பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதிப் பத்திரமும் (அட்மிஷன் கார்ட்), நேர சூசிகையும் இன்றிரவு 8 மணிக்குப் பின்னர் யாழ்ப்பாணத் தபால்நிலையத்திற்கு வந்துசேர ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

அனுமதிப் பத்திரங்கள் நேர சூசிகைகளுடன் தபால் இலாகாவின் விசேஷ வான் ஒன்று காலை 7 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்பட்டு இங்கு வந்து சேரும் என்று நேற்றுக் கொழும்புத் தபால்நிலையத்திலிருந்து யாழ்ப்பாணத் தபால்நிலைய அதிபருக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

பரீட்சை அனுமதிப் பத்திரம், நேரசூசிகைகளைத் தபாற்பகுதி ஊழியர்கட்கு மேலதிகசம்பளம் கொடுத்து பரீட்சார்த்திகளுக்கு வழங்குமாறும் இங்கு பணிக்கப் பட்டுள்ளது.

ஜி. ஸி. ஈ. (உயர்தரம்) பரீட்சையும் ஏற்கனவே அறிவித்தபடி நாளை ஆரம்பமாகுமென்றும் தெரிவிக்கப் பட்டது. (கா. நி)

## யாழ். தபால் நிலையத்தில்

## காணி அமைச்சு திட்டம்

கோட்டை, வெள்ளி

யாழ். மாவட்டத்தில் ஒன்றரை லட்சம் ஏக்கர் காணியில் உபஉணவுப் பயிர்ச்செய்கை செய்யப்படவிருக்கிறது. புளுலை என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலத்துக்கடியிலான நீரூற்று இத்திட்டத்துக்கு உதவும்.

இதற்கான நடவடிக்கையை காணிநீர்ப்பாசனஅமைச்சு மேற்கொண்டுள்ளது.

நாட்டின் சுயதேவையைப் பூர்த்திசெய்வதற்கு தேசிய அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளில் மிகப்பெரிய திட்டமாக இது அமைகிறது.

வெங்காயம், உருளைக் கிழங்கு, மிளகாய் ஆகிய பயிர் இந்த உபஉணவு பயிர்ச்செய்கையில் முக்கிய பயிர்களாக செய்கைபண்ணப்படும்.

இந்தத் திட்டத்தின் மூலம் நாட்டின் சுயதேவையைப் பூர்த்திசெய்யலாமென்றும், ஏற்றுமதிசெய்யலாமென்றும் [illegible] அமைச்சு கருதுகிறது.

ஒன்றரைமாதத்தில்

## ஐந்து தடவை பாம்புகடித்ததாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

## ஆம்ஸ்ரோங்குக்கு புதிய பதவி

[illegible] திரனில் காலடி எடுத்து வைத்த முதலாவது மனிதர்

## விமானம் நொருங்கியது

வெனிசுலா, டிச 4

வெனிசுலா வில்கராக சுக்கருகே விமானமொன்று விபத்துக்குள்ளானதால் பிரயாணம் செய்த 60 பேரும் கொல்லப்பட்டிருக்கலாமெனத்தெரிவிக்கப்பட்டது

## கிணற்றுக்குள் வாலிபரின் சடலம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் ஸ்ரேசன் வீதியில் வசிக்கும் செல்வம் என்னும் அழைக்கப்படும் 23 வயது வாலிபர் ஒருவர் நேற்றுக் காலை அருகிலுள்ள

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 275 சுவீட் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:-

1-ம் பரிசு

09 H 0684 100,000

2-ம் பரிசு

12 Y 0831 40,000

3-ம் பரிசு

44 T 0523 10,000

தலா ரூபா 657-20 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:-

| | |
|---|---|
| 42 A 0940 | 07 A 0121 |
| 19 A 0485 | 02 A 0142 |
| 08 A 0513 | 40 B 0645 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிப் பத்திரங்கள் நேர சூசிகைகளுடன் தபால் இலாகாவின் விசேஷ வான் ஒன்று காலை 7 மணிக்கு கொழும்பிலிருந்து

ஜி. ஸி. ஈ. (உயர்தரம்) பரீட்சையும் ஏற்கனவே அறிவித்தபடி நாளை ஆரம்பமாகுமென்றும் தெரிவிக்கப் பட்டது. (கா.நி)

யாழ். தபால் நிலையத்தில்

# ஒரு மாதத்தில் மட்டும் 20,000 ரூபா வசூல்

யாழ்ப்பாணம், வெள்ளி

உள்ளூர்த் தொலைபேசித் தொடர்புகளுக்கும் கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது, தொலைபேசி இலாகாவுக்குப் பெரும் வருமானத்தைக் கொடுக்கிறது,

கட்டணம் அறவிடத் தொடங்கிய அக்டோபர் மாதத்திலேயே யாழ்ப்பாணத் தபால் நிலையத்தின் மூலம் சுமார் இருபதினாயிரம் ரூபா அறவிடப்பட்டுள்ளதாகச் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்புதிய வேலையான மீட்டர் கணக்கிடுவதையும் தொலைபேசி இயக்குனர்களே செய்வதால் மேலும் புதிய தொலைபேசி இயக்குனர்களை நியமிக்குமாறு யாழ். தபால்நிலைய அதிபர் தலைமை அலுவலகத்தைக் கேட்டபோது இப்போதைக்கு நியமிக்கமுடியாதெனத் தலைமை அதிகாரிகள் பதில் அனுப்பியுள்ளனராம் (கா.நி)

ஆசிரியரை மோதிய

# லொறியில் கிடந்தன 109 மாட்டுத்தோல்கள்

மட்டுவில், வியாழன்

ஆசிரியர் ஒருவரை முட்டி மோதியதாகக் கூறப்படும் லொறியொன்றைச் சோதனையிட்ட பொலீசார் லொறிக்குள் இருந்த பதினான்கு மாட்டுத்தோல் மூடைகளை கைப்பற்றினர். சாவகச்சேரியில் நேற்று முன் தினம் இவை கண்டு பிடிக்கப்பட்டன.

பொலிஸ் சார்ஜன்ட் திரு. கே. இராஜரத்தினம் சோதனை நடத்தியபோது லொறிக்குள் இரத்தம் ஒழுகியநிலையில் 109 புதிய மாட்டுத்தோல்கள் அடங்கிய 14 மூடைகளைக் கண்டுபிடித்தார். இது சம்பந்தமாக திரு இராஜரத்தினம், லொறிச்சாரதியான முத்தையா தனபாலசிங்கத்தையும், கிளீனரான சுப்பிரமணியம் இராஜதுரையையும், மாட்டுத்தோல் மூடைகளின் சொந்தக்காரரான முகதீன்பிச்சை சாகுலா மீதையும் கைது செய்து, சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்தார்,

மாட்டுத்தோல் மூடை சொந்தக்காரரான முகதீன் பிச்சைசாகுலா குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து, அவருக்கு ரூபா 75 அபராதம் விதித்த மாஜிஸ்திரேட், ஏனைய இருவரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

ஆசிரியரை மோதின குற்றத்திற்காக லொறிச்சாரதி மீது வழககுத் தொடரும் படியும், பொலீசாருக்குக்கட்டளை பிறப்பித்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த பாடசாலை ஆசிரியர் வேலுப்பிள்ளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## இன்று நினைவு தினம்

யாழ்ப்பாணம், வெள்ளி

பெரியார் வீரசிங்கத்தின் ஐந்தாவது நினைவுதினம் இன்று மாலை நடைபெறவிருக்கிறது. வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் ஆதரவில் நடைபெறும் இவ்வஞ்சலிக் கூட்டம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

கூட்டுறவுத் தந்தையாகவும், ஆட்சிமன்ற உறுப்பினராகவும் விளங்கிய திரு. வீரசிங்கம், மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபராகவும் கடமையாற்றினர்.

ஒன்றரைமாதத்தில்

## ஐந்து தடவை பாம்புகடித்ததாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கோண்டாவில் பகுதியில் 14 வயது இளைஞர் ஒருவரை 5 தடவைகள் பாம்பு கடித்திருக்கிறதாம். ஒன்றரை மாதங்களுக்குள் 5 தடவைகள் பாம்பினுல் இவர் தீண்டப்பட்டதுபற்றி கிராமவாசிகள் ஆச்சரியப்படுகிருர்கள். சி. ஆனந்தராசா என்ற இந்த இளைஞருக்கு நாகதோஷம் இப்பதாகவும் இன்னும் இரு தடவைகள் இவர் பாம்புகளினுல் தீண்டப்படுவார் என்றும் சிலர் கூறுகிருர்கள்

## மரம் தறித்த வழக்கில் எதிரி விடுதலை

வல்வெட்டித்துறை, வியா.

அல்வாய் மேற்கைச் சேர்ந்த க.கதிராமர் என்பவர் பொலிகண்டியைச் சேர்ந்த செல்லையா பெண் மாரிமுத்துவுக்கு சொந்தமான வேப்பமரத்தை கடந்த ஆவணிமாதம் முதலாம் திகதி வெட்டி ரூபா 100 நட்டம் விளைவித்தும், மாரிமுத்துவை பயமுறுத்தியதாகவும் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே.விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் சாட்சிகளில் முரண்பாடு இருப்பதைக் கண்டு எதிரியை விடுதலை செய்தார். எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு.வி.பி. சுந்தரலிங்கம் ஆஜராஞர்.

வாயுகுழாய்வெடித்ததால்

## 7 பேர் காயமடைந்தனர்

கோட்டை, வியாழன்

இலங்கைகோல்ட் ஸ்ரோரிஸில் ஏற்பட்ட சிறு விபத்தின் காரணமாக ஏழு தொழிலாளர்கள் காயமடைந்துள்ளனர்.

மேற்படி நிலையத்தின் சோடா உற்பத்திப்பகுதியிலுள்ள ஒரு அமோனியா வாயு குழாய் வெடித்ததினுலேயே இவர்கள் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது. இந்த 7 தொழிலாளர்களும் உடனே கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் நால்வர் படுகாயமுற்றிருப்பதாக வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## ஆம்ஸ்ரோங்குக்கு புதிய பதவி

வாஷிங்டன் டிச. 4

சந்திரனில் காலடி எடுந்து வைத்த முதலாவது மனிதர் நீல் ஆம்ஸ்ரோங்குக்கு அமெரிக்க அரசு புதிய பதவி அளித்திருக்கிறது.

அமெரிக்க சமாதானப் படையின் ஆலோசகராக நியமிக்கப்பட்டிருக்கிருர். பகுதி நேர ஆலோசகராக இவர் மடமையாற்றுவார்.

சடலம்

யாழ்ப்பாணர், வெள்ளி

யாழ்ப்பாணம் ஸ்ரேசன் வீதியில் வசிக்கும் செல்வம் என்று அழைக்கப்படும் 23 வயது வாலிபர் ஒருவர் நேற்றுக் காலை அருகிலுள்ள கிணறு ஒன்றுக்குள் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

இம் மரணத்தில் ஏற்பட்டுள்ள சந்தேகம் சம்பந்தமாக யாழ். குற்றத்தடுப்பு பொலிஸ் சார்ஜன்ட் திரு. த மோதரம் விசாரணை நடாத்துகின்ருர். (கா. நி)

# ஜனுதிபதி நிக்ஸனை கொலை செய்வதாக பயமுறுதினுராம்

## நீக்ரோ தலைவர் கைது

வாஷிங்டன், டிச. 4

அமெரிக்க ஜனுதிபதி திரு. றிச்சாட் நிக்ஸனைப் பயமுறுத்தியதாக அமெரிக்க நீக்ரோக்களின் தலைவர்களில் ஒருவரான திரு: ஹிலியாட் என்பவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சென்ற மாதம் நடந்த வியட்னும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது நீக்ரோத் தலைவரான திரு. ஹிலியாட் கலந்துகொண்டு ஜனுதிபதி நிக்ஸனைக் கொலை செய்யப்போவதாக கூறினுராம்.

ஜனுதிபதியைக் கொலை செய்யப்போவதாக பயமுறுத்தியதாகக் குற்றஞ்சாட்டி இவர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இக் குற்றச்சாட்டின் மீது திரு. ஹிலியாட்மீது வழககு தொடரப்படவுள்ளது.

# 5000 சுருட்டு தொழிலாளர் வேலைக்கு திரும்பினுர்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தம் செய்த சுருட்டு தொழிலாளர்களில் இதுவரை சுமார் 5000 பேர் வேலைக்கு திரும்பியிருக்கிருர்கள். சுமார் 80 உற்பத்தியாளர்கள் சம்பளமாக 15 ரூபா கொடுக்க சம்மதம் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்தே, தொழிலாளர்கள் வேலைக்கு திரும்பினுர்கள்.

சம்பள உயர்வு கோரி வடபகுதியில், சுமார் 13000 சுருட்டுத் தொழிலாளர்கள் இம்மாதம் 1-ம் தேதி வேலை நிறுத்தம் செய்தார்கள் இவர்களில் இன்னும் 8000 பேர் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்து வருகிருர்கள்.

அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்க தலைவர் திரு. ஏ. துரைராஜசிங்கமும், மற்றும் தொழிற்சங்க நிர்வாகத்தர்களும், நேற்று வேலை நிறுத்தம் நடைபெற்று வரும் இடங்களுக்கு சென்று நிலைமையை ஆராய்ந்தனர்.

# சம்பள நிர்ணய சபையை கூட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை சுருட்டுத்தொழிலாளர் சங்க வேண்டுகோளுக்கிணங்க 25 சுருட்டு முதலாளிமார்கள் 15 ரூபா சம்பளம் உயர்வு கொடுக்க சம்பதித்துள்ளார்கள். மற்றும் பலசுருட்டுத் முதலாளிகள் இதுபற்றி முடிவுசெய்வதற்கு மூன்று நாட்கள் அவகாசம் கேட்டுள்ளனர்.

இலங்கை சுருட்டுத்தொழிலாளர் சங்க செயலாளர் திரு. சி. முதலியார் நேற்றிரவுமேற்கண்டவாறு நமது நிருபரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: சம்பள நிர்ணய சபையை விரைவில் கூட்டி கூலி உயர்வை நிர்ணயப்படுத்த உடனடியாக யாழ்ப்பாணத்தில் சம்பள நிர்ணய சபையை கூட்டும்படி எமது சங்கம், தொழில்மந்திரியிடம் கோரியுள்ளது.

சம்பள நிர்ணயசபை கூடி இக்கூலி உயர்வை அமுல் நடத்த நடவடிக்கை எடுக்கும்.

44 T 0523 10,000

தலா ரூபா 657-20 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:-

| | |
|---|---|
| 42 A 0940 | 07 A 0121 |
| 19 A 0485 | 02 A 0142 |
| 08 A 0513 | 40 B 0645 |
| 22 B 0351 | 34 B 0027 |
| 35 B 0352 | 19 B 0186 |
| 15 B 0218 | 04 C 0772 |
| 23 C 0881 | 35 C 0379 |
| 39 D 0117 | 10 D 0556 |
| 02 D 0189 | 15 E 0518 |
| 09 E 0334 | 31 E 0043 |
| 09 E 0780 | 23 F 0030 |
| 18 G 0009 | 33 G 0689 |
| 26 G 0887 | 17 H 0986 |
| 16 H 0900 | 24 H 0556 |
| 19 H 0247 | 36 J 0452 |
| 27 J 0585 | 05 J 0486 |
| 31 K 0161 | 42 L 0635 |
| 40 L 0937 | 41 L 0625 |
| 29 L 0789 | 27 L 0844 |
| 40 L 0651 | 04 M 0577 |
| 41 N 0299 | 31 N 0383 |
| 24 N 0976 | 07 N 0926 |
| 19 N 0234 | 04 N 0116 |
| 21 N 0992 | 26 O 0909 |
| 17 O 0247 | 23 P 0402 |
| 18 P 0601 | 02 P 0246 |
| 35 Q 0020 | 34 Q 0385 |
| 13 Q 0924 | 37 Q 0717 |
| 43 Q 0649 | 10 R 0120 |
| 15 R 0439 | 17 R 0215 |
| 37 R 0391 | 14 R 0983 |
| 39 S 0756 | 32 S 0104 |
| 18 S 0258 | 38 S 0363 |
| 33 T 0134 | 13 T 0634 |
| 07 T 0591 | 12 T 0250 |
| 15 T 0777 | 38 T 0842 |
| 36 U 0716 | 41 U 0689 |
| 42 U 0116 | 01 U 0790 |
| 15 V 0547 | 30 V 0350 |
| 28 V 0190 | 19 V 0575 |
| 33 V 0590 | 34 V 0441 |
| 10 W 0130 | 29 W 0809 |
| 13 W 0768 | 20 W 0582 |
| 24 X 0304 | 25 X 0284 |
| 05 X 0465 | 11 X 0346 |
| 19 X 0921 | 08 Y 0560 |
| 25 Y 0152 | 09 Y 0502 |
| 34 Y 0536 | 32 Y 0261 |
| 14 Y 0731 | 14 Y 0946 |
| 16 Z 0320 | 41 Z 0918 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை.)

பிட்டி, இரத்மலானை ஆகிய இடங்களுக்கு இன்று மேலும் அத்தியாவசியப் பொருள்களுடன் சரக்கு வண்டிகள் புறப்பட்டுச் சென்றதாக ரயில்வே அதிகாரியொருவர்

போ. சபை பஸ் சேவை மேலதிகமாக துரித கதியில் நடைபெறுவதாக இ. போ. சபை அதிகாரி யொருவர் கூறினுர்.

# தாமதங்கள் தெரியப்படுத்தப்படும்

பார்சல்களையும் தபால்தந்திக் காசுக்கட்டளைகளையும், பதிவுக்கடிதங்களையும் பொதுமக்களிடம்வாங்கும்போது விநியோகத்திலுள்ள தாமதத்தை பொதுமக்களுக்குச் சொல்லவேண்டுமென்று சகல தபால் தந்தி இலாகா ஊழியர்கட்கும் யாழ்ப்பாணம்போஸ்ட்மாஸ்டர் திரு. ஏ. ஈ ஜே. பெனடிக்ட் பணித்துள்ளார்.

## 2 பெட்டிகளில் 9 பிரயாணிகள்

நேற்று இங்கு வந்து சேர்ந்த கொழும்புக் கடிதங்கள் உட்பட சகல கடிதங்களும் நேற்று மாலை விநியோகம் செய்யப்படவில்லை. வழக்கம் போலஇன்றுகாலையே விநியோகம் செய்யப்படும். பொதுமக்கள் யாராவது தபால் நிலையத்தில் வந்து கேட்டால் அவை வழங்கப்படுமென்று போஸ்ட்மாஸ்டர் தெரிவித்தார்.

நேற்றுக்காலை 7 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்துஅநுரதபுரத்துக்குச் சென்ற எண்ணை, உணவுப்பொருட்களைக்கொண்ட புகைவண்டியில் பிரயாணிகட்கும் இரண்டு பெட்டிகள் இணைக்கப்பட்டிருந்தன. ஆனுல்அவற்றில் 9 பிரயாணிகள் மட்டுமே பிரயாணம் செய்தனர்.

காலை 8-20மணிக்கு பளைக்குச் செல்லவேண்டிய மற்றப் புகைவண்டி 9 மணிக்குப் பின்னரே சென்றது இதில் 4 பிரயாணிகள் மட்டுமே பிரயாணம் செய்தனராம்.

அநுராதபுரம்வரை செல்லும் புகையிரதங்களில் தபால் பைகளையோ பார்சல்களையோ அனுப்பும் முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

வெள்ளிக்கிழமையாதலால் இன்று காலை விமானசேவையில்லை. மாலையிலேயேயாழ்.- கொழும்பு விமான சேவையிருப்பதால் அதுவரை தந்தி, விமானக்கடிதங்கள் எதுவும் பட்டுவாடா விநியோகம் செய்யமுடியாத நிலையும் உருவாகியுள்ளது.

## கொழும்பு — யாழ் பஸ்களில் நெருக்கடி

நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் கொழும்பிலிருந்து புறப்பட்ட இ. போ. ச. பஸ் ஒன்று 75க்கும் மேற்பட்ட பிரயாணிகளுடன் நேராக நேற்றுக் காலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தது. பிரயாணிகள் நிற்கவும் இடமில்லாமல் இதில் பிரயாணம் செய்தனர். இதே பஸ் இங்கிருந்து கொழும்பு பிரயாணிகளுடன் நேற்றே கொழும்பு திரும்பியது.

புகையிரத வேலைநிறுத்தம் காரணமாக பஸ்களில் பிரயாணிகள் தொகை வர வர அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. இதனுல் யாழ் பஸ் நிலையத்திலிருந்தே நிரம்பிய பிரயாணிகளுடன் புறப்படும் பஸ்கள் வழிகளிலுள்ள பஸ் தரிப்பு நிலையங்களில் நிறுத்திப் பிரயாணிகளை ஏற்ற முடியாத ஒரு நிலையும் ஏற்பட்டுள்ளது. கூடுதலான பஸ் சேவை எதுவும் ஒழுங்கு செய்யப்படவில்லை (கா.நி)

# ஆஸ்பத்திரி தொழில்நுட்ப உதவியாளர்வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், வெள்ளி

நாடுமுழுவதிலுமுள்ள ஆஸ்பத்திரி ஆய்வுகூட தொழில்நுட்ப உதவியாளர்களும் நேற்று முதல் வேலை நிறுத்தத்தில் குதித்தனர். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் 3 தொழில்நுட்ப உதவியாளர் வேலைநிறுத்தம் செய்துள்ளனர்.

கடந்த8 நாட்களாகநடைபெற்றுவரும், ஆஸ்பத்திரி ஆய்வுகூட தொழில்நுட்ப ஊழியர்களின் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் உள்ள வெளிநோயாளர் பகுதி ஆய்வு கூடம் நேற்று முதல் மூடப்பட்டிருப்பதால் நோயாளிகள்பெரிதும் கஷ்டமடைந்துள்ளனர்.

யாப்பாணம் ஆஸ்பத்தி உட்பகுதி ஆய்வு கூடத்தில் ஒருவர் மட்டும் வேலைசெய்கிருர். 15 தொழில் நுட்ப ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர்,

## இன்று

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்று மாலை 6 மணிமுதல் இரவு 7 மணிவரை வித்துவான் க. கி. நடராசனுல் பெரியபுராண விரிவுரைத் தொடரில் ''திருக்குறிப்புத் தொண்டர்'' என்னும் பொருள் பற்றிய கதாப்பிரசங்கமும் இரவு 7 மணிக்கு சுக்கிரவார அம்மன் உற்சவமும் நிகழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு. 1969டிசம்பர் பரீட்சை G. C. E. (O/L) சரித்திர பாட வழிகாட்டிவினு-விடை இரண்டாம் பகுதி: விலை 3 ரூபா. ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1573

நவீன ஜேர்மன் எந்திர சாதனங்களால் தயாரிக்கப்பட்ட திறமான ஒட்டக மார்க் செங்கற்கள் விற்பனைக்குண்டு. ஜனுசெங்கல் ஒட்டுத் தொழிற்சாலை, கண்டாவளை. 1585

இயந்திரம்:

16 H P. (Black Stone) டீசல் என்ஜின் நல்ல நிலைமையில் உடனடியாக விற்பனைக்கு உண்டு. பார்வையிட்டு விலை கேட்கவும். வ. கந்தையா, பிரதானவீதி, இளவாலை, யாழ்ப்பாணம். 1588

### தேவை

சகல இடவசதிகளும் அடங்கிய சொன்ற் லூட்ஸ் கொன்வென்ற் விடுதிச்சாலையில் சேர்த்துக்கொள்ள இளம் பெண்கள் தேவை. தொடர்பு கொள்க. வண. சிஸ்ரர் சுப்பீரியர் சொன்ற் லூட்ஸ், கொன்வென்ற், இல. 3, ரெம்பிள் ரோட், யாழ்ப்பாணம். 1574

**வின்ஸர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
தென்னகத் திரைகளில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச்சித்திரம்
**எதிர் நீச்சல்**

**மனோகரா**
யாழ்ப்பாணம்
தினசரி6-30 10-00
காமினி பொன்சேகா ருக்மணி தேவி, ஜயகாந்த்
**பாராவலலு**
சிறந்த சிங்களச் சித்திரம்

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர்-விஜயகுமாரி முத்துராமன்-வாணிஸ்ரீ
நடித்த
**உச்சரம்மா**
மாதர்களுக்கு அரைக்கட்டணம்

### வெளிவந்துவிட்டது

குடியியல் வினுவிடை க. பொ. த. (சாதாரணம் வகுப்பிற்குரியது. உயர் கலைக் கல்லூரி வெளியீடு.

விலை ரூ. 2-25

**ஸ்ரீலங்கா புத்தகசாலை,**
யாழ்ப்பாணம். 1859


## ஆசிரியர் இல்லை

அல்லைப்பிட்டி, வியாழன்

வேலணை செட்டிபுலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் பல காலமாக ஆங்கில ஆசிரியர் நியமிக்கப்படாததினுல் இப்பகுதி மாணவர்கள் மிகுந்த கஷ்டம் அனுபவிக்கின்ருர்கள். இதுசம்பந்தமாக கல்விப் பகுதியினருடன் தொடர்பு கொண்டும் ஒருவித பலனும் கிடைக்கவில்லையாம்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 5—12—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 பண்ணுறிந்தமிழ், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 சிறுவர்விருந்து, 5-45 அஸான்.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வயலின், 7-35 குங்குமம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசைநிகழ்ச்சி, 10-30 செய்திச்சுருக்கம்.


**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30 9-30


## விளையாட்டரங்கும் திறந்த வெளியரங்கும்

முசலி, வியாழன்

நானாட்டான் மேற்கு கிராமச்சபை தனது எல்லைக்குள் விளையாட்டரங்கையும், திறந்த வெளியரங்கையும் நிர்மாணிப்பதற்கான அத்திபாரக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இது உள்ளூராட்சி அமைச்சினுல் கொடுக்கப்பட்ட நன்கொடையில் கட்டப்படுகின்றது இதை முடிக்கும் பணியில் நானாட்டான் மேற்கு கிராமச்சபை அக்கிராசனர் திரு. சூ. இம்மனுவல்பிள்ளையும், மன்னார் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. தேவரத்தினம் டான்யோத்தும், மன்னார் மாவட்ட வேலைப்பகுதி பிரதம அத்தியட்சகர் எஸ். கனகசபாபதியும் முயற்சி எடுத்துவருகினர்.

## 'இடர் மறைய வழி'

மாவிட்டபுரம், வியாழன்

'நாவலர் வழியில் நாம் செல்வதாயின் அவர் போற்றிய சித்தாந்த சைவநெறியையும் கந்தபுராண கலாச்சாரத்தையும் போற்றுதல் நிலையாய கடன்' என வித்துவான் சைவப்புலவர் க. கணபதிப்பிள்ளை யாழ்ப்பாணத் தொழில் நுட்பக் கல்லூரி சைவமன்றம் நடத்திய நாவலர் விழாவில் கலந்துரையாற்றுகையில் கூறினர்.

திரு. சி மோகனதாஸ் தலைமையில் நடந்த இவ்வைபவததில் இவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

நாவலர் நீதிமான். நீதி வடிவானவர் நாவலரை நாம் குரவராகக் குருபூசை செய்து வழிபட எமக்கு வருகின்ற எல்லா இடர்களும் மறைந்துவிடும்.

கல்லூரி மாணவர்களின் கவியரங்கும் நடைபெற்றது

## இவர்களுக்கு பாராட்டு விழா

உடுப்பிட்டி, வியாழன்

அகில இலங்கைச் சாகித்திய மண்டலப் போட்டியில் முதல் பரிசைப்பெற்ற கவிஞர் காரை செ, சுந்தரம்பிள்ளைக்கும்'முகை வெடித்த மொட்டு' ஆசிரியர் நவாலியூர் நா செல்லத்துரைக்கும், அகில இலங்கைகாந்தி நூற்றுண்டு விழாவில் கவிதையில் முதல் பரிசைப் பெற்ற அரியாலையூர் வே. ஐயாத்துரைக்கும் வதிரி, அல்வாய் மக்களால் எதிர் வரும் 12ம் திகதி பாராட்டு விழா நடாத்தப்படவுள்ளது.

வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரித் திறந்த வெளியரங்கில் நடைபெறும், இவ்விழாவிற்குத் திரு த- இராசலிங்கம் தலைமை வகிப்பார், கவிஞர் வி. கந்தவனம், திரு இரா சிவலிங்கம், டாக்டர் திரு ஆர். சாம்பசிவம் திரு எம்,எஸ். சீனித்தம்பி வித்துவான் க. ந. வேலன் ஆகியோர் பேச்சாளர்களாகக் கலந்து கொள்வர்.

## நோயாளருக்கு வசதி

முசலி, வியா

மல்லாவி ஆஸ்பத்திரியில் நோய்க்காக சிகிச்சைபெறும் நோயாளிகள் நுளம்புக்கடியால், தினமும் தாக்கப்படுவதால் அவர்களுக்கு நுளம்பு வலை கொடுப்பதென்று தீர்மானிகப்பட்டுள்ளது.

வவனிக்குளம் இணைப்புக் குழு கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது. கூட்டம் மன்னார் அரசாங்க அதிபர் திரு. எஸ். கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்றது.


**யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி**

உங்கள் குடும்பம் சிறக்க
உங்கள் நாடு செழிக்க
உங்கள் வங்கியில் சேமியுங்கள்

1 சேமவைப்பு

தினமும் பணம் போடுவதற்கும் எடுப்பதற்கும் வசதியுள்ள சேமவைப்பு. இச்[illegible]மிப்பில் மாதம் மாதம் இருக்கும் குறைந்த [illegible]திப்பணத்திற்கு 3 3/4 % வட்டி கொடுக்கப்படும். மிகவும் தெரிந்த வாடிக்கைக்காரர்களுக்கு அவர்களின் காசோலை, காசுக்கட்டளை முதலியன இச்சேமிப்புக் கணக்கின் மூலம் வசூல் செய்துகொடுக்கப்படும்.

மாதாந்த தொடர் சேமவைப்பு

ரூபா 1/- தொடக்கம், அதன் எத்தனை மடங்கு


## 'இலங்கையின் சரித்திரத்தில் உன்னத காலம் இது'

### கல்வி அமைச்சர் பெருமிதம்

காலி, வியா

'இலங்கையின் சரித்திரத்தில் இபபோதுதான் மிக உன்னதமான வளமான ஒரு காலம்' என கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை அகன்கமவில் நடைபெற்ற ஆசிரிய பெற்ருர் அடங்கியமகாநாடொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஹபரதுவாவைச் சேர்ந்த ஆசிரியரும் பெற்ருேரும் கலந்து கொண்ட இந்த மகாநாட்டில் திரு. இரியகொல்லை மேலும் பேசுகைகையில் கூறியதாவது:

முன்னரைப்போல் இப்போது பிள்ளைகள் யாரும் பசியால் இங்கு இறப்பதில்லை.

இப்போதுள்ள பிரச்னையென்னவென்ருல் உள்ளதைக்கொண்டு திருப்தியாக வாழ்வதற்கு நாம் பயிற்சி பெற்றுக்கொள்ள வில்லை. நாம் பழைய விஷயங்கள் பற்றி அதிகமாகச் சிந்தித்துக்கொண்டிருக்கிருேம். இதனுல் இன்றும் நாளையும் என்ன நடைபெற வேண்டும் என்பது பற்றி சிந்திக்காமல் அதற்கான முயற்சி மேற்கொள்ளாமல் இருந்து கொண்டிருக்கின்ருேம். மிக முக்கியமான தினம் இன்று தான் என்பதை நாம் நன்கு நினைவு படுத்திக்கொள்ள வேண்டும்.

நாட்டை நன்கு பரிபாலிப்பதாக இருந்தால் இளைஞர்களுக்கு நல்ல கல்வி புகட்டியாகவேண்டும் அத்தோடு அவர்களை நன்கு கவனித்துக் கொள்ள வேண்டும்.

எல்லோருக்கும் வேலை வழங்குவதற்கு மட்டுமே கல்வியல்ல நல்ல பிரஜைகளை உருவாக்குவதற்காகவே தான் கல்வி கற்பிக்கப்படுகிறது.

இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக இருந்துவந்த கல்விமுறை சென்ற வருடத்தில் மாற்றப்பட்டது. புதிய கல்வி முறையில் வருங் காலத்தில் 1600 புதிய ஆங்கில ஆசிரியர்கள் ஆங்கிலம் பயிற்றுவிக்க நியமிக்கப்பட விருக்கிருர்கள். ஆங்கிலம் ஒரு உலக மொழி எனவே அதை நாம் புறக்கணித்ததால் மிகப் பெரிய தவறை செய்து[illegible]டோம். சிங்களத்தையும் நாம் மறக்காது அதற்குரிய இடம் அளிக்க வேண்டும்.

நான் அமைச்சராக பதவி [illegible] பலகாலமாக [illegible]லிருந்த பல [illegible]ஞான ஆசிரியர்களை கிராமங்களுக்கு இடமாற்றம் செய்தேன். கிராமங்களில் பல விஞ்ஞான ஆய்வு கூடங்களும் இப்போது நிறுவப்பட்டுள்ளன'.

கல்வித்துறையில் இப்போது ஏற்பட்டுவரும் நல்ல மாற்றங்கள் குறித்து தாம் மிக்க மகிழ்ச்சியடைந்து வருவதாகவும் திரு. இரியகொல்லை தெரிவித்தார்.

பருத்தித்துறை

## நகரசபைத்தலைவர் யார்?

யாழ்ப்பபாணம், வெள்ளி

பருத்தித்துறைநகரசபைத் தேர்தல் முடிவடைந்தும் தேர்தல் சூடு இன்னும் ஆறவில்லை. நகரசபையின் புதிய தலைவர் தெரிவிலும் பெரும் பரபரப்பு நிலவுகிறது.

ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட இந்த நகரசபையில் நான்கு உறுப்பினர் மட்டுமே பழைய நகரசபைத் தலைவருக்கு ஆதரவாகஇருப்பதாகத்தெரிகிறது.

என்றுமில்லாத அளவுபரபரபான சூழ்நிலையில் நடந்தேறிய தேர்தலில் முன்னையநிர்வாகத்தை எதிர்த்துப்போட்டியிட்ட சகல கட்சிக்கூட்டணியினரின் தீவிரப் பிரசாரத்தால் இந்தச்சூழ்நிலை உருவாகியுள்ளதாக அறியப்படுகிறது.

சகல கட்சி கூட்டணியினரில் ஒருவர் புதிய தலைவராகக்கூடிய சூழ்நிலையும் உருவாகியுள்ளது.

## மேலதிக வகுப்பறைகள்

கோட்டை, வியாழன்

கொழும்புபாடசாலைகளில் அடுத்த வருடம் ஆரம்ப வகுப்புக்கு சிறுவர்களை ஏராளமாகச்சேர்ப்பதற்காக 92 மேலதிக வகுப்பறைகள் 4 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ளன.

இவ்வகுப்பறைகளுக்குத் தேவையான தளபாடங்கள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளன. கல்வி இலாகாவுக்கு விண்ணப்பித்திருந்த எல்லாச்சிறுவர்களும் கல்விமாஅதிபர் திரு. வி. வீரவர்த்தனுவினுல் நியமிக்கப்பட்ட 13 குழுக்கள் மூலம் பாடசாலைகளில் சேர அனுமதி பெற்றுள்ளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறந்த சமுதாயம் உருவாக வழி

மாவிட்டபுரம், வியா.

வருங்கால சமுதாயத்தை அமைக்கப்போகும் மாணவர்கள் தாம் பயிலும் கல்வி நிலையங்களில் நல்ல ஒழுக்கங்களையும் பண்பாடுகளையும் பழகிக் கொண்டால்தான் இன்றுள்ள பிரச்னைகள் தீர்ந்து சிறந்த சமுதாயத்தை உருவாக்கலாம்.

இவ்வாறு காங்கேசன் துறை கல்வி நிலைய கணித ஆசிரியர் திரு வரதனின் பிரியாடை வைபவத்துக்குத் தலைமைதாங்கிப் பேசிய நிலைய அதிபர் திரு. வி விஜயகுமார் கூறினர்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தையிட்டி கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு கணபதிப் பிள்ளை பேசுகையில், மாணவர்கள்தான் வருங்காலத்தில் சிறந்த விஞ்ஞானிகளாகவும் சிறந்த சேவையாளராகவும் ஆட்சிமன்ற உறுப்பினர்களாகவும் வரப்போகிறவர்கள் என்றும் மாணவர்கள் தமது பாடசாலை வாழ்க்கையில் பழகும் பழக்கங்கள்தான் அவர்கள் வாழ்க்கையைச் சிறப்படையச் செய்யும் என்றும் கூறினர்.

தமக்களிக்கப்பட்ட பிரியாவிடைக்கு திரு. வரதன் நன்றி கூறினர்.

## நாவலர் விழா

அல்லைப்பிட்டி, வியா

'சைவசமயம் பேருடன் விளங்குவதற்கு முக்கிய காரணகர்த்தாவாக விளங்கியவர் நல்லைநகர் நாவலர் பெருமானுவர். அவர் தோன்றியிரேல் சைவமும் தமிழும் நம் நாட்டில் ஒளி குன்றி நிலைகுன்றி அழிந்து போயிருக்கும்'' என வேலணை மத்திய கல்லூரி இந்து மாமன்றத்தினரால் நடாத்தப்பட்ட நாவலர் விழாவில் உரையாற்றிய பண்டிதை புஷ்பா செல்வநாயகம் குறிப்பிட்டார்.

பண்டிதர் க. இராசையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் செல்வி புஷ்பா தொடர்ந்து பேசுகையில் நாவலர் நமக்குக் காட்டிய நற்பணியை நாம் கடைப்பிடித்தால்தான் நாம் அவருக்கு உண்மையான தொண்டு செய்தவர்களாவோம் என்று கூறினர்.

செல்வி அருட்செல்வி, பொ.மணிக்கவாசகர் உட்படப் பலரும் உரையாற்றினர்.

இவ்வைபவத்தில் திரு. கனகராசா, செல்வி என். பூபதி, லோறன் சரத் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

இறுதியில் திரு. விசுவநாதன் நன்றி கூறினர்.


நுண்கலை

**யாழ். நுண்கலை தொழிற் பாடசாலை இளைஞர் சமூக பொருளாதார முன்னேற்ற மன்றம்**

கில்னர் மண்டபம் — வண்ணுர்பண்ணை.

பின்வரும் பாடங்கள் கற்பதற்குப், பிரவேச விண்ணப்பங்கள் 15-1-70 வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. மோட்டார் இயந்திரம் திருத்துதல் 2 வருடங்கள்
2. மின்சார இணைப்பு வேலை 1 வருடம்
   1-ம், 2-ம் பிரவேசக்கட்டணம் 5/- } சேரும்
   உபகரணக் கட்டணம் 25/- } பொழுது
   மாதாந்தக் கட்டணம் 15/-
3. தையல் வேலை (மெசின் 12 மாதங்கள்
   பிரவேசக் கட்டணம் 5/-
   மாதாந்தக் கட்டணம் 5/-

(1) ஆங்கிலம் (2) கணிதம் (3) சிங்களம் G.C.E. (O.L.)

4. தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து 12மாதங்கள்
   பிரவேசக் கட்டணம் 5/-
   மாதாந்தக் கட்டணம்
   ஒரு பாடத்திற்கு 10/- வீதம்

மேற்படி காரியாலயத்தில் விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம், அல்லது 10சத முத்திரையும், விலாசமுடைய என்வலப் அனுப்பி, தபால்மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விலாசம்:

**இளைஞர் மன்றம்**

426, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
சிவ உ. சோமசேகரம் — கௌரவ தலைவர்
இ. சபாலிங்கம் — கௌரவ காரியதரிசி
1860


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர்-விஜயகுமாரி
முத்துராமன்-வாணிஸ்ரீ
நடித்த

# டீ ச் ச ர ம் ம ா

மாதர்களுக்கு அரைக்கட்டணம்

---

வல்வெட்டித்துறை

# றஞ்சனு தியேட்டர்

தினசரி: 6-30, 9-30
நாகேஸ்வரராவ் - ஜமுனு
நடித்த

# தென்றல் வீசும்

---

REGAL JAFFNA
Daily 4-45, 7, & 9-45 p.m
Patracia Dozzi
in
RAPTURE

---

திச்சுருக்கம், 8-03
மூஸ்லிம்நிகழ்ச்சி, 9-30
இசைநிகழ்ச்சி, 10-30 செய்திச்சுருக்கம்.

---

# ஸ்ரீகாலிங்கன்

இணுவில்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, யோயா 2-30 மணி
நடித்த
ஜெய்சங்கர்-விஜயலட்சுமி

# அன்பு வழி

---

# வெஸ்லி சினிமா

மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஆர். ராதா-எஸ். எஸ். ஆர்
நடித்த

# இரத்தக்கண்ணீர்

[புதிய கொப்பி]

---

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
ஜெமினி - சரோஜாதேவி
எஸ்.எஸ்.ஆர்.-ராஜசுலோஜனு
நடித்த

# குலவிளக்கு

---

இன்று முதல்

இங்ஸ்லி [கொழும்பு] — பிளாஸா [வெள்ளவத்தை]

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்

ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்

★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே.ஆர்.விஜயா
★ நாகேஷ் ★ மனேரமா

நடித்த

# திருவருட் செல்வர்

[ஈஸ்ட்மென் கலர்]

---

3 3/4 % வட்டி கொடுக்கப்படும். மிகவும் தெரிந்த வாடிக்கைக்காரர்களுக்கு அவர்களின் காசோலை, காசுக்கட்டளை முதலியன இச்சேமிப்புக் கணக்கின் மூலம் வசூல் செய்துகொடுக்கப்படும்.

## மாதாந்த தொடர் சேமவைப்பு

ரூபா 1/- தொடக்கம், அதன் எத்தனை மடங்குகளும் இச்சேமிப்பு முறையில் 60 மாதங்களுக்கும், 81 மாதங்களுக்கும், 120 மாதங்களுக்கும் மாதவீதம் பணம்போட்டுச் சேமிக்கலாம். உதாரணமாக - ரூபா 1/- மாதம் மாதம் கட்டுபவர் 60 மாதமுடிவில் ரூபா 70/- பெறுவார், 81 மாத முடிவில் ரூபா 100/- பெறுவார். 120 மாதமுடிவில் ரூபா 163/- பெறுவார்.

## 3 நிலைச்சேமவைப்பு

இச்சேமவைப்பில் எவ்வளவு தொகையும் போடலாம். 12 மாத சேமவைப்புக்கு 4% வட்டி கொடுக்கப்படும். 60 மாத சேமவைப்புக்கு 5% வட்டி கொடுக்கப்படும். 120 மாதசேமவைப்புக்கு 5 1/2% வட்டி கொடுக்கப்படும்.
மேலும் விபரங்களுக்கு அண்மையிலுள்ள கிளை வங்கிகளுடன் தொடர்புகொள்ளவும்.

கிளைகள்

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | -59, பிரதான வீதி, யாழ்ப்பாணம் |
| பரந்தன் | - கண்டி வீதி, பரந்தன். |
| சுன்னுகம் | - காங்கேசன்துறைவீதி, சுன்னுகம் |
| நெல்லியடி | - கரவெட்டி வீதி, நெல்லியடி- |
| சங்கானை | - சங்கானை |
| சாவகச்சேரி | - கண்டிவீதி, சாவகச்சேரி. |
| ஊர்காவற்றுறை | - ஊர்காவற்றுறை. |
| வலி-கிழக்கு | - பருத்தித்துறை வீதி, புத்தூர் |

தலைமைக்காரியாலயம்:
59, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே. எண். 633.

---

# ஆணி தயாரிக்கும் முழு இயந்திரங்களும்

## விற்பனைக்குண்டு

1) கிடைநிலையான (Horizontal) விக்ஸ்ரேு எம் ஜேர்மன் மெஷின்கள் 3.
(2) செங்குத்தான (Vertical) டபிள்யூ எம் கிளேடர் அமெரிக்கன் மெஷின் 1.
(3) செங்குத்தான (Vertical) ஜப்பான் மெஷின் 1.
(4) ஆணி துப்புரவு செய்து கூராக்கும் மெஷினும் அதன் மோட்டரும் 3 (Polishing Barrels With Line Shaft and Motor 3)
(5) பெரிய கிறைன்டிங் மெஷின் 1.

மேற்கண்ட மெஷின்களில் ஒன்றிலிருந்து இரண்டரை அங்குல நீளமும் பத்திலிருந்து பன்னிரண்டுவரையான கனமுமுள்ள ஆணிகளே தயாரிக்கமுடியும்.

நாள் ஒன்றுக்கு 8 மணித்தியாலத்தில் ஒரு மெஷினில் 6அந்தர் நிறையுள்ள ஆணிகள் தயாரிக்கலாம்.

ஆணி தயாரிக்கும் கம்பிகள் சகல அளவிலும், கனத்திலும் இலங்கை

## ஸ்டீல் காப்பரேஷனில்

பெறலாம்.

## தபால் பெட்டி இல: 1311,

கொழும்பு-2 என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்.

1850

---

டோம். சிங்களத்தையும் நாம் மறக்காது அதற்குரிய இடம் அளிக்க வேண்டும்.

நான் அமைச்சராக பதவியேற்றபின் பலகாலமாக நகரத்திலிருந்து பல ஞான ஆசிரியர்களை கிரா[illegible]

அதிபர் [illegible] விஞல் நியமிக்கப்பட்ட 13 குழுக்கள் மூலம் பாடசாலைகளில் சேர அனுமதி பெற்றுள்ளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

விலாசம்:

# இளைஞர் மன்றம்

426, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

சிவ உ. சோமசேகரம் — கௌரவ தலைவர்
இ. சபாலிங்கம் — கௌரவ காரியதரிசி

1860

---




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே. வங்க கூட்டணி ஆட்சிக்கு ஆபத்து

கல்கத்தா, டிச 4

மேற்கு வங்கத்தில் கூட்டணி ஆட்சி கவிழக்கூடிய ஆபத்தான நிலையை அடைந்து கொண்டிருக்கின்றது.

கேரளத்தில் நம்பூதிரி பாட்டின் கூட்டணி மந்திரி சபைக்கு ஏற்பட்ட ஆபத்து மேற்கு வங்க கூட்டணி மந்திரிசபைக்கும் ஏற்படலாம் என்று கூறப்படுகின்றது.

மேற்கு வங்காளத்தில் சட்டம் ஒழுங்கு முதலியவை தொடர்ந்து மோசமாகிக் கொண்டிருந்தால் கூட்டணி ஆட்சியில் முக்கிய பங்காளியான பங்களா காங்கிரஸ் விலகிக்கொள்ளப் போவதாக அறிவித்திருக்கின்றது. பாங்களா காங்கிரஸின் தலைவரும் ராஜ்ய முதல் அமைச்சருமான திரு. அஜோய்குமார் முகர்ஜி இதை அறிவித்திருக்கிறார். மேற்கு வங்க மந்திரிசபைக் கவுழக்கூடும் என்று கூறப்படுவதற்கு இந்த அறிவித்தலே காரணமாகும்.

ராஜ்யத்தில் சட்டம் ஒழுங்கு மோசமாக வன்முறைகள் தலைதூக்கியிருப்பதை எதிர்த்து திரு. அஜோய் முகர்ஜி 3 நாள் உண்ணாவிரதம் இருந்தார். இன்று அவரும் அவரோடு உண்ணாவிரதம் இருந்தவர்களும் பழரசம் அருந்தி உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்கள். அதைத் தொடர்ந்து மேலும் 30 பேர் உண்ணாவிரதம் செய்ய ஆரம்பித்தார்கள். ராஜ்யத்தில் மாமூல் நிலைமை திரும்பும்வரைக்கும்இந்த உண்ணாவிரதம் தொடர்ந்து நடைபெறும்.

மேற்குவங்கத்தில் பொலிசார் செயற்பட முடியாதபடி செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று முதலமைச்சர் திரு. முகர்ஜி கூறியிருப்பதை பொலிஸ் இலாகாவுக்குப் பொறுப்பாய் இருக்கும் துணைமுதல்வர் திரு. ஜோதி பாசு மறுத்திருந்தார் என்னிடம் புகார் செய்திருக்கலாம் என்று திரு. ஜோதிபாசு குறிப்பிட்டார்.

நேற்று மேற்கு வங்காளத்தில் பாராபஸார் என்ற பகுதியில் ஏற்பட்ட ஒரு கைகலப்பில் பலர் காயமுற்றார்கள். இரு கோஷ்டிகளுக்கிடையில் ஏற்பட்ட இந்த மோதலில் மூன்று பொலிசார் படுகாயங்களுக்குள்ளானதாக கூறப்படுகின்றது.

## பிரதமரின் கார் முன் பாய்ந்தவர்

கோட்டை, வியா

பிரதமர் டட்லி சேனநாயக்கா பிரயாணம் செய்து கொண்டிருந்த காருக்கு முன்னால்பாய்ந்ததாகக்கூறப்பட்ட ஒருவர்கடுகணுவைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரதமர் தனது கண்டி விஜயத்தை முடித்துக் கொண்டு கொழும்புக்குத் திரும்புகையில் இச்சம்பவம் நடந்ததெனவும் பிரஸ்தாப நபர் அப்பொழுது குடிபோதையில் இருந்ததாகவும் தெரிகிறது. வீதியில் விழுந்ததன் காரணமாககாயமடைந்துள்ள இந்த நபரைப் பொலிசார் கண்டி ஆஸ்பத்ரியில் அனுமதித்துள்ளதோடு இச்சம்பவம் சம்பந்தமாக மேலும் விசாரணை நடாத்துகின்றனர்.

## வீரர்கள் சாதனை

விஸ்வமடு வியா

கடந்த மூன்றுமாத கால இடைவேளையில் இடைக்கட்டு, உடையார்கட்டு ஆகிய குளக்கட்டு குடியேற்றத்திட்ட வாசிகளுக்கு போதியளவு நீர்ப்பாசன வேலைகளை விஸ்வமடு விவசாயப்படை வீரர்கள் முடித்துக் கொடுத்திருக்கின்றனர் இடைக்கட்டுக்குள குடியேற்ற வாசிகளுக்கு சுமார் 700 ஏக்கருக்கான நீர்ப்பாசன வேலைகளையும், உடையார்கட்டு குளக் குடியேற்ற வாசிகளுக்கு பழுதடைந்து போன நீர்ப்பாசன வாய்க்கால்களையும் திருத்திக் கொடுத்துள்ளனர். தற்போது உடையார்கட்டு கழிவு வாய் கால் வேலைகள் முடிவுறும் நிலையில் இருப்பதால்தொடர்ந்து இவ்வாய்க்காலில் சட்டிட வேலைகளை ஆரம்பிக்க உள்ளனர். இக் கட்டிடவேலைகள் இரண்டு மாதங்களுக்குப் போதுமானதாகும். அதேநேரத்தில் விஸ்வமடு குள குடியேற்றத் திட்ட கழிவு வாய்க்கால் வேலைகளையும் மேற்படிவீரர்களேதொடர்ந்து செய்து வருகின்றனர் இவ் வேலைகள் அனைத்தும் இன்னும் ஒருமாத காலத்தில் முடிந்தபின் அடுத்த தைமாதத்தில் இருந்து விஸ்வமடு படித்த வாலிபர் குடியேற்றத் திட்டத்தில் மேட்டுநில நீர்ப்பாசன வேலைகளை ஆரம்பிக்கஉள்ளனர். இந்தமேட்டு நில நீர்ப்பாசன வேலைகள் சுமார் 420 ஏக்கர் வரையும் செய்துமுடிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

## லெபனன் எல்லையில்

# கொமாண்டோ நிலைகளை இஸ்ரேல் அழித்ததாம்

பெய்ரூட், டிச. 4

தெற்கு லெபனனில் கொரில்லா தலம் ஒன்றை இஸரேலியர் அழித்துவிட்டதாக அறிவித்திருக்கின்றனர்

அரபு கொரில்லாத் தலத்தின்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 9 கொமாண்டோக்கள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது

இஸ்ரேல் தனது எல்லைகளை [illegible] வைக்கிருக்க விரும்புகிறது என்று இத்தாக்குதல் பற்றி கருத்து வெளியிடுகையில் இஸ்ரேல் பாதுகாப்பு மந்திரி எபான் ஜெரூசலத்தில் கூறினர்.

இஸ்ரேலியரின் ஆக்கிரமிப்பு எண்ணத்தையே இத்தாக்குதல் நடவடிக்கை எடுத்துக்காட்டுகிறதென்று லெபனன் பிரதமர் திரு. ரஸீத் கராமி கூறியிருக்கிறார்.

## தி. மு. க. தலைவர்களை அனுமதிக்கவேண்டாம்

பாணந்துறை, வியா

'நாம் தமிழர்', தி.மு. க. போன்ற தேசத்திற்குத் தீங்கு விளைவிக்கும் இயக்கங்கள் நாட்டில் தீவிரமாக வளர்ச்சியுற்றுவரும் இவ்வேளையில் இந்திய தி. மு.க. தலைவர்களை இங்குவர அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது. மேற்படி இயக்கங்களைத் தடைசெய்யவேண்டுமென்றும் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் கோரிக்கைகள் அனுப்பப்பட்டும் தேசிய அரசாங்கம் இது குறித்து ஒருவித நடவடிக்கையும் இதுவரை எடுக்காதது ஆச்சரியமாகவிருக்கிறது'

உடகஹபற்று கிராம சபைத் தலைவர் திரு. திலகரத்தின கிராமசபையின் மாதாந்தக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் இரகசியமாக வளர்ந்துவரும் மேற்படி இயக்கங்களை அரசாங்கம் தடைசெய்யவேண்டும் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரும் அரசியல் தலைவர்களின் முக்கிய நோக்கம் இங்குள்ள இந்தியர்களை இவ்வியக்கங்களில் சேரவைப்பதே எனக் குறிப்பிட்டார்.

## நெல்லின்மையால் ஆலைகள் மூடப்பட்டன

மூதூர். வியா

மூதூரில் ஏழு தனியார் அரிசி ஆலைகள் திடீரென மூடப்பட்டதால் நூறுக்கும் மேற்பட்ட தொழிலாளிகள் தொடர்ந்து வேலைசெய்ய இயலாதவர்களாகவுள்ளார்கள் அரசாங்க நெல் களஞ்சியங்களில் இவ்வாலைகளுக்கு அனுப்புவதற்கு நெல்இல்லாமையே இவ்வாலைகள் மூடப்பட்டமைக்குக் காரணமாகும்.

மேற்படி ஆலை முதலாளிகள் கந்தளாயில்உள்ள அரசாங்க நெல் களஞ்சியத்திலிருந்து நெல்லை தாங்கள் ஆலைக்குக் கொண்டுவருவதில் கஷ்டமேற்படுவதால் அங்கிருந்து நெல்லைப்பெற விரும்பவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது

திருக்கோணமலை மாவட்ட அரிசி ஆலைகள் முதலிமார் சங்[illegible] பொதுக் காரியதரிசி தி[illegible] ஆறுமுகம் மேற்படி வேலையில்லாது கஷ்டப்படும் தொழிலாளர்கள் சம்பந்தமாக மேலதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாகத் தெரிகிறது.

கரம்பனில்

## வீதி திருத்த ரூ. 17,000 வழங்கப்பட்டது

அல்லைப்பிட்டி, வியா

கடந்த பல வருட காலமாக போக்குவரத்துக்கு உபயோகிக்கமுடியாமல் இருந்து வரும் ஊர்காவற்றுறை கரம்பன் மெலிஞ்சிமுனை வீதி வெகுவிரைவில் விஸ்தரிக்கப்பட்டு திருத்துவதற்கென அரசாங்கத்தினுல் ரூபா பதினேளாயிரம் வழங்கப்பட்டுள்ளது இவ்வீதியை திருத்துவதற்கு பணம் வழங்கும்படி காவலூர் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. நவரத்தினம் அரசினரை கேட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## முதலையால் தொல்லை

உடுப்பிட்டி, வியா

குளத்தில் குளிக்கச்செல்பவர்களை முதலை விரட்டி வருகிறது. கரவெட்டி கிழக்குப் பகுதியில் உள்ள 'மருதடி' என்னும் குளத்தில் தான் முதலை அட்டகாசம் செய்து வருகிறது

சில நாட்களுக்கு முன்பு பெய்த கடும் மழையினல் வெள்ளத்துடன் வந்தபெரிய முதலையொன்று இக்குளத்தில் குடிபுகுந்துள்ளது. இதனல் இப்பகுதி மக்கள் அக்குளத்தில் குளிக்க முடியாது பெரிதும் கஷ்டம் அடைந்து வருகின்னர் பலதடவைகள் இம்முதலையைக்கொல்வதற்கு எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்து விட்டதாம்.


31—வது ஆண்டு விழாவை முன்னிட்டு

நாடகப் போட்டி

பரிசு

தங்கப் பதக்கம்

★ சமூக நாடகங்கள் மட்டும்

★ விண்ணப்ப முடிவு திகதி 30-2-1970

அரைச்சலார்

1 — 1 — 1970 முதல் 15 — 1 — 1970 வரை

கொழும்பு ஸ்ரூடியோ

யாழ்ப்பாணம்.

Phone: 410



இனிய நெக்டோ




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

டோக்கள் கொல்லப்பட்ட துக்காட்டுகிறதென்று தாக அறிவிக்கப்பட்டது லெபனன் பிரதமர் திரு. இஸ்ரேல் தனது எல்லை ரஸீத் கராமி கூறியிருக்கி

செய்துமுடிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

வேலையில்லாது கஷ்டப்படும் தொழிலாளர்கள் சம்பந்தமாக மேலதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாகத்தெரிகிறது.



# புத்திசாலி இவர்..

கிடுகுகளால் வேயப்பட்ட தமது வேலிகளை

## றிவர் பிராண்ட்

கல்வனைஸ்ட் தகடுகளால் மாற்றியமைத்து விட்டார்.

இதனால் பணம் மிஞ்சுகிறது, நீடிய காலம் நிலைக்கிறது, பொருத்த இலகுவாகிறது, கூலிச்செலவைக் குறைக்கிறது

நீங்களும்

வேய்தல், அடைத்தல் மற்றும் வேலிகளுக்கு

## றிவர் பிராண்ட்

கல்வனைஸ்ட தகடுகளையே உபயோகிக்க ஆரம்பியுங்கள்.


உங்களுக்கு அண்மையிலுள்ள இரும்புப் பொருள் வியாபாரியைக் காணுங்கள்.

இலங்கை கல்வனைசிங் இன்டஸ்ட்றீஸ் லிமிட்டெட்
450, பழைய சோனகத் தெரு, கொழும்பு.

CGI-14-69 MASTERS

# நெக்டோ

உண்மையில் புத்துணர்ச்சி அளிப்பது!




எலிபன்ட் பிரான்டின் தேவாமிர்த பானத்தின்



பழச்சாற்றின் சாரம் நிறைந்த இதன் தனித்தன்மையை ருசியுங்கள்.

CCS

## எலிபன்ட் ஹவுஸ்

சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,
கொழும்பு, கண்டி, திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ ழ நா டு

Eelanadu National Tamil Daily
Telegrams "EELANADU" Jaffna.
Post Box 49 Jaffna. Telephone 889

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் கார்த்திகை மாதம் 20-ந் திகதி (5-12-69)


## வேலை நிறுத்தங்கள்

ரயில் என்ஜின் சாரதிகளினதும் 'கார்டு'களினதும் வேலைநிறுத்தம் இத்தலையங்கம் எழுதப்படும்பொழுதும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வேலைநிறுத்தம் விரைவில் முடிவடைவதற்கான அறிகுறிகளும் தென்படவில்லை. இந்த வேலைநிறுத்தத்தை விரைவில் சமரசமாகத் தீர்த்து வைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிடில் ரயில்வேயைச் சேர்ந்த இதர ஊழியர்களையும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுத்துவதற்கான முயற்சிகளை மற்றும் தொழிற்சங்கங்கள் மேற்கொண்டுள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது. சரக்கு வண்டிகள் சில சேவைசெய்யத்தொடங்கியிருப்பதாலும் சில சில இடங்களில் மட்டுப்படுத்தப்பட்ட சேவை நடைபெறுவதாலும் வேலைநிறுத்தத்தை அரசாங்கம் முறியடித்துவிடக்கூடுமென்ற அச்சம் தொழிற்சங்கங்களுக்கிடையிலும் அவற்றை வழிநடத்தும் அரசியல் கட்சிகள் மத்தியிலும் ஏற்படக்கூடும். இதனுல் ரயில்வே ஊழியர் அனைவரையும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுத்தவும் இதர துறைகளிலும் வேலைநிறுத்தத்தைப் பரப்பவும் முயற்சிசெய்யக்கூடும். சில சமயம் சமரசப் பேச்சுவார்த்தையில் விட்டுக்கொடுத்து நிலைமையைச் சமாளிக்கவும் முன்வரலாம்.

ஆனுலும் இப்போது நாட்டில் தோன்றியுள்ள சூழ்நிலை மீண்டும் ஒரு வேலை நிறுத்தப்புயலை உருவாக்கியிருப்பதாகவே அமைந்துள்ளது.

ரயில் என்ஜின் சாரதிகளும் 'கார்டு'களும் வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர். ஆஸ்பத்திரிகளில் ஆய்வுகூடத் தொழில்நுட்ப நிபுணர்களின் வேலைநிறுத்தமும் நீடிக்கிறது. துறைமுகத்தொழிலாளர் நேற்று முன்தினம் வெளிநடப்புச் செய்ததுடன் 10-ம் திகதி முதல் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்திருக்கின்றனர். இலங்கை உரக் கூட்டுத்தாபன ஊழியரும் வெளிநடப்புச் செய்திருக்கின்றனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் சுருட்டுத்தொழிலா

மற்ற இடங்களிலுள்ளவர்களுக்குள்ள வசதியும் சலுகைகளும் தங்களுக்கும் தரப்படவேண்டுமென்றும் இந்த வேலைநிறுத்தங்கள் நடைபெறுகின்றன.

வேலைநிறுத்தம் செய்யும் ஊழியர்களுக்குக் கஷ்டம் இல்லாமலில்லை. கஷ்டத்தைத்தாங்கிக்கொண்டு அவர்கள் வேலைநிறுத்தம் செய்வதாயின் அவர்களது கோரிக்கைகளில் நியாயமிருக்க வேண்டும்; அவர்களுக்குக் குறைகளில்லையென்றும் சொல்ல முடியாது. நாட்டில் பல பாகங்களிலுமுள்ள தொழில் இணைப்புக்காரியாலயங்களில் வேலைவேண்டுமெனப் பதிவுசெய்துள்ளோர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 88 ஆயிரத்து 711 பேர் என்றும் இது கடந்த வருடத்தைவிட 26,000 அதிகமாகுமென்றும் மத்தியவங்கி அறிக்கை தெரிவிக்கிறது. அதாவது வேலையற்றோர் தொகை லட்சக்கணக்கில் அதிகரித்துவருகிறது தனியார்துறையிலுள்ள ஊழியர் பலருக்கும் திட்டமான சம்பளமோ, சமசம்பளமோ, படி உயர்வோ இல்லை. வேலையற்றவர்களுடனும் தனியார் துறை ஊழியர்களுடனும் ஒப்பிடுகையில் அரசாங்கஊழியர்களின் நிலை எவ்வளவோ மேல். ஆனுலும் வாழ்க்கைச் செலவு உயர்வு, வாழ்க்கை அந்தஸ்து ஆகியவைகள் அவர்களைத் தாக்காமலில்லை. அரசாங்க ஊழியரின் சம்பளத்தை உயர்த்த, உயர்த்த வாழ்க்கைச்செலவு அதிகரித்து மேலும் மேலும் பொது மக்களைப் பாதிக்கச்செய்கிறது சில தினங்களுக்கு முன்னர் நாம் இதே பத்தியில் குறிப்பிட்டிருந்ததுபோல் வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும், அரசாங்க சேவையில் உயர் பீடத்திலுள்ளவர்களுக்கும் மற்றையோருக்கும் சம்பள விகிதத்திலுள்ள பெரிய இடைவெளியை நீக்கவும் நடவடிக்கை எடுப்பதுதான் நாட்டின் முக்கிய பிரச்னைக்குத் தீர்வுகாணச் சிறந்தவழியென்பதை மீண்டும் வற்புறுத்த விரும்புகிறேம்.

என்றுலும் இப்போதுமீண்டும் ஆரம்பமாகியுள்ள வேலை

# வடக்கிலே அமையவேண்டும்

# நாட்டையும் மொழியையும் காக்க நல்லதோர் பூரணபல்கலைக்கழகம்

(நேற்றைய தொடர்ச்சி)

க. பொ. த. உயர்தர கல்வி கற்பிக்கும் கல்லூரிகள் கொழும்புக்கு அடுத்தபடியாக யாழ்ப்பாண மாவட்டத்தில்தான் மிக அதிகம் உண்டு. ஆண்டு தோறும் கொழும்பு, பேராதனை ஆகிய பல்கலைக்கழகங்களில் சேரும் மாணவர்களுள் பெரும்பகுதியான தமிழ் மாணவர்கள் மேற்படி கல்லூரிகளில் இருந்தே வெளிவருகிருர்கள். பேராதனையிலும் கொழும்பிலும் சேருவதற்காக செல்லும் மாணவர்கள் அனைவருக்கும் விடுதி கிடையாத காரணத்தால் வெளியில் வாடகை வீடுகளில் குடியிருந்து வருகிருர்கள். குறிப்பாக பெண்கள் கூட மிகவும் விரும்பத்தகாத சூழ்நிலைகளில் கூட குடியிருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதை பெற்றேர்களும் மற்றேர்களுமே அறிவர். பல்கலைக்கழகப் பிள்ளைகளுக்காக வீடுகளில் உள்ள கார்விடும் அறைகளும் பண்டகசாலைகளும்கூடப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தரீதியில் வேறுபல்கலைக் கழகங்கள் அவசியமா என்ற கேள்விக்கு ஆம் என்ற பதிலை விட வேறெதுவும் எதிர்பார்க்கமுடியாது. பல்கலைக்கழகம்பற்றி ஆராய்ந்த பேராசிரியர் 'நீட்காம்' என்பவரின் அறிக்கை வடக்கே பல்கலைக்கழகத்தின் அவசியத்தை வற்புறுத்தியுள்ளது. கலாச்சாரப் பல்கலைக்கழகங்களாக அங்கீகாரம்பெற்ற வித்தியோதய, வித்தியாலங்காரா என்ற இரு புதிய பல்கலைக்கழகங்களும் அமைந்ததைத்தொடர்ந்து வடக்கிலும் அப்பேற்பட்ட ஓர் பல்கலைக்கழகத்தை அமைக்கவேண்டும் என்ற அவசியத்தை காலம் சென்ற செனட்டர் சு. நடேசபிள்ளை அவர்கள் சிறிமதி பண்டாரநாயக்கா அவர்களிடம் வற்புறுத்திக் கூறிவந்தார். இதைத்தொடர்ந்து பத்து ரூபாவை ஆண்டு தோறும் சிறீலங்கா சுதந்திரக்கட்சி அடையாளமானியமாகஒதுக்கிவந்தது. தேசிய அரசாங்கமும் தனது சிம்மாசனப்பிரசங்கங்களில் தொட

கொண்ட இணைப்புப் பல்கலைக்கழகமாகும். சென்னை, சேலம், திருச்சி, மதுரை என்றெல்லாம் பல இடங்களில் அமைந்த கல்லூரிகள் ஒரே தேர்வை நடத்தி ஒரே பட்டத்தையும் மாணவர்களுக்குத் தருகின்றன இலங்கையில் இந்த அமைப்பு இன்னமும் ஏற்படவில்லை. அண்ணுமலைப் பல்கலைக்கழகம், மதுரைப் பல்கலைக்கழகம் போன்றவை ஓர் அங்க பல்கலைக்கழகங்களே. இவற்றைப்போன்றே இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களும் இன்று விளங்குகின்றன. அண்மையில் பேரா

லைக்கழகப் படிப்பை முடித்துவிட்டு நியமனம்பெருது தவிக்கிருர்கள். அடுத்த ஆண்டில் இருந்து பொறியியல் நிபுணர்களும் வேலையற்ருேர் வரிசையில் சேர்ந்து விடுவார்கள் என்று நம்பப்படுகிறது. இந் நிலையைக் கண்ட போதும் பல்கலைக் கழகங்கள் என்று கூற முற்படுவது பேதமை. நாட்டின் பொருளாதார அபிவிருத்தி துரிதப்படுமாயின் தொழில் வளம் பெருகுமாயின் திட்டமிட்ட பொருளாதார அமைப்பொன்று உருவாக்கப் படுமாயின் இத்தேக்க நிலைமை தகரும்.

— வ. பொன்னம்பலம் எம். ஏ. —

தனைப் பல்கலைக்கழகத்தை தனிப்பல்கலைக்கழகமாக நிறுவ அரசாங்கம் சட்டமியற்றியபோது ஒரு கடும் போராட்டத்தை எதிர்த்து மாணவர்கள் தொடக்கினுர்கள். அவர்களுடைய விருப்பம் இலங்கைப் பல்கலைக்கழகம் என்ற பெயர் தொடர்ந்தும் இருக்கவேண்டும் என்பதே. நிலைமையைச் சமாளிக்க விரும்பிய அரசாங்கம் விட்டுக்கொடுத்து இலங்கைப்பல்கலைக்கழகம் கொழும்பு, இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனை என்று பெயர்சூட்டியுள்ளது. தமிழ் பல்கலைக்கழகம் அல்லது தமிழ்ப்பிரதேசத்தில் தனிப் பல்கலைக்கழகம் அமைவதை சந்தேகக் கண்கொண்டு நோக்கும் எமது சிங்கள அரசியல்வாதிகள் அவர்களது பெருந்தன்மையை நிலைநிறுத்தி எதுவித அச்சமும் இன்றி இப்பிரச்னையைத் தீர்க்க விரும்பினுல் இணைப்புக்கல்லூரிகளை வடக்கிலும் கிழக்கிலும் அங்கீகரித்து இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பயனை நாடுஅனைத்தும் அனுபவிக்க உதவ முடியும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இந்துப்பல்கலைககழகம் அமையவேண்டும் என்று கோரும் தமிழ்ககாங்கிரஸ் கட்சியினர் ஆறுமுகநாவலர் இர[illegible] அவர்கள், ம[illegible] ரா[illegible] போன்ற பெரியோர்கள் தர்மசொத்தாக விட்

தொழில் துறையில் துரித முன்னேற்றம் ஏற்படும், தேசிய செல்வம பெருகும் இவற்றை உருவாக்க எமக்கு அறிவியற்துறை நிபுணத்துவம் பெற்ற மருத்துவ நிபுணர்களும் பொறியியல் துறை தலைவர்களும் அவசியம் தேவை இத்தகைய நூறு ஆயிரம் பேரை ஆக்கித் தருவதற்கு வல்ல ஒரு முழுமையான பல்கலைக்கழகம் வேண்டும். தமிழ்ப்புலவர்களையும் இந்துமதஅர்ச்சகர்களையும் உற்பத்தி செய்வதற்காக எவரும் பல்கலைக் கழகம் அமைக்கவேண்டும் என்று நம்புவதற்கில்லை.

தமிழரின் ஐக்கியம் பேண வேண்டும் என்ற போர்வையில் திருமலையில் பல்கலைக் கழகம் வேண்டுமென்றுகேட்பவர்கள் கிழக்கிலங்கையில் இன்று க பொ.த. உயர்தர வகுப்புகள் கொண்ட கல்லூரிகள் எத்தனை உண்டு என்று எண்ணிப் பார்ப்பது மிகவும் பொருத்தம். கிழக்கிலங்கைக்கும் பல்கலைக் கழகம் வேண்டும்தான் ஆனுல் அது இன்று அமையவேண்டுமென்று விரும்புவது பால

னுக்குத் திருமணம் நிச்சயித்த தந்தையின் அன்பை ஒத்தது. காலப் போக்கில் கிழக்கிலங்கையில் பல்கலைக் கழகம் ஒன்று அமைத்தே ஆகவேண்டும் ஆனுல் அத்தகைய பல்கலைக்கழகம் இந்து ஆக இருந்தால் இஸ்லாமியரும் கிறிஸ்தவரும் சேர முடியாமல் போய் விடுமே என்று வருந்துகிருர்கள். இத்தகைய விசால எண்ணம் படைத்த தமிழரசுக் கட்சியினர் மேலும் ஒருபடி சென்று சிந்தித்தால் இலங்கைக்கே பொதுவான ஒரு பல்கலைக் கழகம் அமையவேண்டும் என்று ஏன் கோர முடியாது. தமிழ் பல்கலைக்கழ கழகம் என்ற பெயரை இங்களமக்கள் எதிர்ப்பார்கள் என்பதற்காக மட்டுமல்ல தனித் தமிழ் பல்கலைக்கழகமாகக் கோரினுல் அது கிடைக்குமாயின் ஏனைய பல்கலைக்கழகங்கள் அனைத்தையும் சிங்களப் பல்கலைக்கழகங்களாக்க நாம் துணைநின்றவர்களாகி விடுவோம் இது மிகுதிப் பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழி, இந்துமதம் போன்ற துறைகளை இல்லாமல் செய்வதற்கு வழி வகுத்துவிடும். வடக்கில் அமையும் பல்கலைக்கழகம் தென் இலங்கை மாணவர்களும் வந்து எமது மொழி இலக்கியம் பற்றி எமது மக்களின் வாழ்வு பண்புகள் பற்றி நேரில் படித்துப் பழகி தேசிய ஒருமைப்பாட்டை முறையாக வளர்க்க துணை நிற்க வேண்டும். அதே வேளையில் வடஇலங்கை மாணவர்களும் மகாவலியில் நீராடி, பேராதனைப் பூங்காவில் நடமாடி கொழும்பு வீதிகளை வலம் வந்து இது எமது நாடு இவை எமது பல்கலைக்கழகங்கள் என்று இறுமாந்து சொல்லக் கூடியதாக இருக்கவேண்டும். அறிவுத் தெய்வம் ஆட்சிபுரியும் உயர் பீடமே பல்கலைக்கழகம் அங்கு இன, மத, மொழி, பேதங்கள் ஒழிந்த இன்பமயமான சமத்துவ உணர்வு நிலவ வேண்டும். எமது தாய் மொழிகளாம் தமிழும், சிங்களமும் உலக அறிவை எமது இளம் சந்ததியினருக்கும் அள்ளித் தரும் இன்பச் சுனைகளாக மாறவேண்டும். இத்தகைய நிலையை எமது நாடு அடையவேண்டுமாயில் வடக்கிலும் ஓர் பல்கலைக்கழகம் வேண்டும் அது முழுமையானதாக அமையவேண்டும். அப்போதுதான் அது எமது நாட்டையும் மொழியையும் காக்க முடியும்.

# இன்றைய பலன்

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

கார்த்திகை மாதம் 20-ம் திகதி (5-12-69)

**மேஷம்-** கனிவான நினைவுகளில் மூழ்கிப் போவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி பிறக்கும். நீண்டநாள் அபிலாசை இன்று நிறைவேறும், உங்களுக்கு உதவ மற்றவர்கள் முன் வருவார்கள்.

**ரிஷபம்-** எதிலும் சோர்வு தென்படும். ஆதரவு காட்டியவர்களே உங்களை அலட்சியப்படுத்துவதற்கு முனைவார்கள். நண்பர்களின் தொல்லைகளால் பண நெருக்கடி தோன்றக்கூடும்.

**மிதுனம்-** உங்கள் நடவடிக்கைகளில் தனிச் சிறப்புத் தென்படும். சிலர் வாழ்க்கையில் பொதுசனத் தலைமைக்கும் இடமுண்டு. பெரியவர் ஒருவர் உங்களுக்கு கை கொடுத்து உதவுவார்.

**கடகம்-** கடமையில் அதிக ஆர்வம் பிறக்கும். எதையும் துரிதமாகச் செய்வதில் வெற்றி காண்பீர்கள் சிலருக்கு நன்மையான இடமாற்றமும் ஏற்படலாம். தெய்வத்தின் துணையும் உண்டு.

**சிம்மம்-** பல வழிகளாலும் பணவரவுக்கு இடமுண்டு. வழக்கறிஞர்களுக்கு இன்று மகிழ்ச்சிகரமான தினம். பிள்ளைகள் மூலம் பெருமைதரும் சம்பவங்கள் நடைபெறும். வரவேற்கவேண்டிய நாள்.

**கன்னி-** வணிகர்கள் இன்று அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும் வீணுன சிந்தனைகளால் வேதனைப்படுவீர்கள். சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படலாம் துக்கதினம்.

**துலாம்-** நெருங்கிய நண்பர் ஒருவரைப் பகைத்துக் கொள்ளநேரிடலாம். பிள்ளையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படும் எதிலும் அவசரக் கோலத்தைத் தவிர்த்துக் கொள்ளவும்.

**விருச்சிகம்-** மேடைப் பேச்சாளர்கள் இன்று பெரும்புகழ்அடைவர். இனபந்துக்களின் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு பொதுவாக வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு.

**தனுசு-** நினைத்த காரியத்தில் தடையேற்படுவது தவிர்க்கமுடியாததாகும் சிலரின் கண்டனங்களுக்கும் இலக்காக நேரிடலாம்.

**மகரம்-** கல்வித்துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது ஆசிரியருக்குப் புகழ் குவியும். சிலர் வாழ்க்கையில் புதிய வாகனம் ஒன்றும் கொள்வனவு செய்யப்படலாம்.

**கும்பம்-** நினைத்ததை முடிப்பதில் இன்று வெற்றி காண்பீர்கள். தொழில்துறையில் பதவி உயர்வுக்கும் இடமுண்டு. சிலர் வாழ்க்கையில் காதல் விவகாரமும் ஏற்படலாம்,

**மீனம்-** நீண்ட பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம். பொருள் கைவிட்டுப் போவதற்கும் இடமுன்டு. வாகனச் சாரதிகள் அதிக கவனம் செலுத்த வேண்டும். அமைதி நன்று.

## இன்று நினைவுதினம்

# தமிழ் இலக்கிய மேதை 'கல்கி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...யப்போவதாக அறிவித்திருக்கின்றனர். இலங்கை உரக்கூட்டுத்தாபன ஊழியரும் வெளிநடப்புச் செய்திருக்கின்றனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் சுருட்டுத்தொழிலாளரும் வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர். இவை தவிர தோட்டப்பகுதிகளிலும் சில சில இடங்களில் வேலைநிறுத்தம் திடீர் திடீரென நடைபெறுகின்றது. பல்கலைக்கழகங்களிலும் மாணவர்களின் வெளிநடப்பும், விரிவுரைகளைப் பகிஷ்கரிப்பதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வேலைநிறுத்தங்கள் வெளிநடப்புக்கள், பகிஷ்கரிப்புக்கள் நம் நாட்டுக்குப் புதிய விஷயங்களல்ல. கடந்த பல வருடங்களாக - நடந்துவருவதுதான். நமது நாட்டுடன் விடுதலைபெற்ற நாடுகள் முன்னேற்றமடையவும் நமது நாடு பொருளாதாரத்தில் பின்தங்கி நிற்கவும் இந்த வேலைநிறுத்தங்களும் வெளிநடப்புக்களும்தான் பெரிதும் காரணமென்பதைப் பலரும் அறிவர்.

சம்பள உயர்வு, படிஉயர்வு போனஸ் மற்றும் பல கோரிக்கைகளை முன்வைத்து இந்த வேலைநிறுத்தங்களில் ஊழியர் ஈடுபடுகின்றனர். அரசாங்க ஊழியரில் சில பிரிவினருக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வு, வாழ்க்கைப்படி உயர்வுகள் தங்களுக்கும் தரவேண்டுமென்றும் சில கூட்டுத்தாபன ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுவதுபோல் தங்களுக்கும் போனஸ் தரப்படவேண்டுமென்றும் வாழ்க்கைச்செலவு உயர்வு அதிகரிப்பைச் சமாளிக்கக்கூலி உயர்வு தரப்படவேண்டுமென்றும்,

...நடவடிக்கை எடுப்பதுதான் நாட்டின் முக்கிய பிரச்னைக்குத் தீர்வுகாணச் சிறந்தவழியென்பதை மீண்டும் வற்புறுத்த விரும்புகிறோம்.

என்றாலும் இப்போதுமீண்டும் ஆரம்பமாகியுள்ள வேலைநிறுத்தப்புயலுக்கு வேறு காரணங்களிருக்க இடமுண்டு. தேர்தல் நெருங்கிவரும் சமயத்தில் வேலைநிறுத்தம் செய்வதால், வேலைநிறுத்தம் செய்யும் ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் பணிந்து கொடுக்க நேரிடும்; இல்லையேல் 'ஆட்சிக்கு வந்தால் நாங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவோம்' என்று உறுதியளித்து எதிர்க்கட்சியினர் தேர்தலில் வெற்றிபெற வாய்ப்பு ஏற்படும். பிரான்சில் நடந்தது போல வேலைநிறுத்தப் பிரச்னையையும், கோரிக்கைகளையும் வைத்து ஆட்சிமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தல் நடத்தவேண்டியேற்படும்.

வேலைநிறுத்தங்களின் காரணம் எதுவாயினும் வேலைநிறுத்தங்களினால் மிகவும் பாதிக்கப்படுபவர்களும் அவதிக்குள்ளாகுபவர்களும் பொதுமக்களே. நாட்டின் பொருளாதார நிலைமையையும் அதன் முன்னேற்றத்தையும் மட்டுமல்லாது பொதுமக்களின் நலனையும் கருத்தில்கொண்டு, வேலைநிறுத்தங்கள் மூலம் பிரச்னைக்குத் தீர்வுகாணவேண்டிய அவசியம் ஏற்படாமலும் வாழ்க்கைச் செலவு, சம்பள உயர்வு ஆகிய பிரச்னைகளுக்கு நிரந்தரமான ஒரு வழிகாணவும் அரசாங்கமும் எதிர்க்கட்சியினரும் தொழிற்சங்கங்களும் முன்வரவேண்டும். ஆனால்...

...தார். இதைத்தொடர்ந்து பத்து ரூபாவை ஆண்டுதோறும் சிறீலங்கா சுதந்திரக்கட்சி அடையாளமானியமாக ஒதுக்கிவந்தது. தேசிய அரசாங்கமும் தனது சிம்மாசனப்பிரசங்கங்களில் தொடர்ந்து வடக்கில் பல்கலைக்கழகம் அமையும் என்ற கொள்கையை ஏற்றதுடன் அடையாள மானியமும் ஒதுக்கும் முறையும் இன்றுவரை இருந்துவருவது குறிப்பிடத்தக்கது. இராமநாதன் பல்கலைக்கழகம் என்ற பெயரில் ஓர் கலாசாரப் பல்கலைக்கழகம் அமையவேண்டும் என்றே ஆரம்பத்தில் இந்தக் கோரிக்கை அமைந்தது. வித்தியோதய, வித்தியாலங்காரா ஆகிய பல்கலைக்கழகங்கள் கலாசாரப் பல்கலைக்கழகங்களாகத் தொடங்கி இன்று விஞ்ஞான பாடங்களும் கற்பிக்கப்படும் பன்மொழிப் பல்கலைக்கழகங்களாக அந்தஸ்தில் உயர்ந்துவருவதை இன்று நாம் அறிகிறோம். சிங்களப் பல்கலைக்கழகங்களாக விளங்கிய இவைகள் இன்று தமிழிலும்கூட கல்வி புகட்டும் நிலைக்கு மாற்றம் அடைந்துள்ளன, முழுவடிவம் பெற்ற பல்கலைக்கழகங்களாக இவை மாறுவது தவிர்க்கமுடியாத தொன்றாகும். இதே போன்று வடக்கிலும் கலாசாரப் பல்கலைக்கழகம் அமையுமானால் காலப்போக்கிலும் பலதுறைகளையும் ஆரம்பிக்க அதிகாரம்பெற்று முழுவடிவிலான பல்கலைக்கழகமாக அது மாற்றமடையுமென்று எதிர்பார்ப்பது தவறல்ல.

வடக்கே பல்கலைக்கழகம் அமைவதை எவரும் எதிர்க்கவில்லை. ஆனால் கிழக்கில் அமையவேண்டும் என்றுஅரசியல் காரணங்களுக்காக தமிழரசுக்கட்சியினர் வாதாடுகின்றனர். அதுவும் அது தமிழ்ப் பல்கலைக்கழகமாக அமையவேண்டும் என்றும் அதன் கிளைகள் வவனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் அமையலாம் என்றும் அவர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். பல்கலைக்கழகங்கள் ஓர் அங்கப் பல்கலைக்கழகங்களாகவும் இணைப்புப் பல்கலைக்கழகங்களாகவும் விளங்குகின்றன. இங்கிலாந்தில் உள்ள கேம்பிறிச் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகங்கள் பல இணைப்புக் கலலூரிகளை அங்கமாகக் கொண்டு இயங்குகின்றன, அவை ஒரே தேர்வுக்கு பல கல்லூரிகளில் பயிலும் மாணவர்களைத் தோன்றச்செய்து அவர்களுக்கு ஒரே பல்கலைக்கழகத்தின்பேரில்பட்டங்கள் வழங்குகிறார்கள் சென்னைப் பல்கலைக்கழகமும் இது போன்ற நாற்பதுக்குமேற்பட்ட கல்லூரிகளை மக்...

...டில் இந்துப்பல்கலைக்கழகம் அமையவேண்டும் என்று கோரும் தமிழ்ககாங்கிரஸ் கட்சியினர் ஆறுமுகநாவலர் இரா[...]நாதவள்ளல், மழவரா[...] போன்ற பெரியோர்கள் தர்மச்சொத்தாக விட்டுச்சென்ற நிலங்களை அவற்றின் வருமானத்தைப் பயன்படுத்தி வடககில் ஓர் பல்கலைககழகம் அமைககவேண்டும் என்று கூறுகிறார்கள். தர்ககத்திற்கு இதை ஆதரிப்பவர்களும் அதற்காகவே அதை எதிர்ப்பவர்களும் உள்ளனர். பல்கலைககழகம் அறிவை ஆதாரமாகக் கொண்டது. அதற்கு மத மொழி இன பேதங்கள் இருக்க முடியாது. பல்கலைக்கழகக் கல்லூரி அமைத்தாலும் சரி அல்லது முழுவடிவிலான பல்கலைக்கழகம் அமைத்தாலும் சரி அதில் தமிழைப் போதனு மொழியாகவும் இந்து தர்மத்தை இஸ்லாத்தை அல்லது பௌத்தத்தை தத்துவத்துறையில் கொண்டதாக அமைப்பது சுலபம் இன்றுஉலகில் உள்ள பல்கலைக்கழகங்கள் எல்லாம் பல மொழிகளை பல தத்துவங்களை கற்பிக்கும் கலைக்கூடங்களாக விளங்குகின்றது. இந்து அல்லது தமிழ் என்று யோசிப்பதை விட அது இரண்டுமாகவும் அதற்கு மேல் பிற மொழிகளையும் பிறமதங்களையும் கூட கற்பிக்க வேண்டும். எமது தமிழ் தலைவர்கள் தமது பிள்ளைகளை உயர் கணிதம் பொறியியல் மருத்துவம் ஆகிய அறிவியற் துறைகளில் மிகச் சிறந்தவர்களாக வளர்க்க தம்மால் ஆனது அனைத்தையும் செய்து வருகிறார்கள் அவர்கள் தமது பிள்ளைகள் பற்றிக் கொள்ளும் அதே அபிலாட்சைகளையும் ஆசைகளையும் இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் பொதுமக்களை ஏன் சொள்ளக் கூடாது? இன்று தமிழ் மொழியில் பல்கலைக் கழகப் போதனைகள் இடம் பெறுகின்றன. இது பெரிதும் வரவேற்கத் தக்கது ஆனல் கலைத்துறைப் பட்டதாரிகள் இலங்கையில் 14000 பேர் பட்டம் பெற்றுவிட்டு வேலையின்றித் தவிக்கிறார்கள் இவர்கள் 5000 பேர்களுக்கு மேல் யாழ்க்குடாநாட்டில் மட்டும் இருக்கிறார்கள். இந்நிலையில் கல்வி அமைச்சர் போன்ற பெரியார்கள் பல்கலைக்கழகங்களை மூடிவிடலாம் என்று கூறுகிறார்கள். இது சரியாயின் க.பொ.த. சாதாண பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் 9 இலட்சம் பேர் வேலையின்றி இருக்கிறார்களே அப்படியாயின் ஏன் பாடசாலைகளையும் மூடிவிடக் கூடாதா? என்று கேட்கத் தோன்றுகிறது. 300 மருத்துவ நிபுணர்கள் பல்க...


## திருமண அழைப்பு

சௌமிய ஸ்ரீ கார்த்திகை மீ 21-ம் திகதி (6-12-69) சனிக்கிழமை இரவு 6-27 மேல் வரும் சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| செல்வன் **சோமாஸ்கந்தர்** (ஆசிரியர் காரைநகர் இந்துக் கல்லூரி) அவர்களுக்கும் | செல்வி **பங்கஜதேவி** அம்மாளுக்கும் |

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் திருமண வைபவத்திலும் பருத்தித்துறை வியாபாரிமூலை "மணல்" என்னும் இல்லத்தில் நடைபெறவிருக்கும் விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் யாபேரையும் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| ஸ்ரீமதி சிவபாக்கியம் அருணாசலம் | டக்டர் க.கனகசபாபதி தம்பதிகள் |
| [மணமகனின் தாயார்] வியாபாரிமூலை, பருத்தித்துறை. | [மணமகளின்பெற்றோர்] 253, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். |

1861


இன்று நினைவுதினம்

# தமிழ் இலக்கிய மேதை 'கல்கி'

பதினைந்து வருடங்கள்! தமிழ் இலக்கியத்துறையில் புதியதோர் அத்தியாயத்தை ஏற்படுத்திய 'கல்கி' என்ற மேதை மறைந்து இன்றுடன் பதினைந்து வருடங்களாகின்றன.

நம்பவே முடியவில்லை! எல்லாமே நேற்றுப்போலிருக்கிறது!

சிறுகதையும், நாவலும் கவிதையும், விமர்சனமும், கிண்டலும், கண்டனமும் அரசியலும், நகைச்சுவையும் எழுதி தமிழ்கூறும் நல்லுலகத்தையே தன்வசப்படுத்திய பேராசிரியர் அவர்!

வாசனின் விகடனுக்குள் நுழைந்து, ஆசிரியராகி, பின்னர் 'கல்கி'யை ஆரம்பித்து புதுமைசெய்து, வாசகர் கூட்டத்தை வளர்த்து தமிழ் இலக்கியத்துக்கு உண்மையாகவே சேவைசெய்த பேரறிஞர் அவர்

இக்கால இலக்கிய கர்த்தாக்களுக்கு அவர் ஒரு தலைவன்! தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, தமிழர்கள் வாழுகின்ற இலங்கை, பர்மா, மலாயா போன்ற நாடுகளிலெல்லாம் 'கல்கி' இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

## ஈழமும் கல்கியும்

'கல்கி' என்ற ரா. கிருஷ்ணமூர்த்திக்கும், ஈழத்துக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்துவந்துள்ளது என்பதைக்கூறும்போது பெருமையாக இருக்கிறது. அவர் இங்கு விஜயம்செய்து, மக்களோடு மக்களாக சேர்ந்து, அறிஞர்களோடு அறிஞர்களாகச் சேர்ந்து, கருத்துப் பருமாறியிருக்கிறார்.

1951-ம் ஆண்டு, யாழ்ப்பாணத்தில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தமிழ் விழா நடந்தது. 'கல்கி' அவர்கள் கலந்துகொண்டு, ஜனசமுத்திரத்தின் மத்தியில் உரையாற்றியதும் முத்தான கருத்துக்களை உதிர்த்ததும் தமிழன்னை பூரிப்பு கொண்டதும் இன்னும் நீங்காத நினைவுகளாக இருக்கின்றன. அவர் அப்போது தனது மகன் கி. ராஜேந்திரன், பெ. தூரன், மறைந்த ஓவிய மேதை "மாலி" ஆகியோருடன் வந்திருந்தார். காலஞ்சென்ற ஈழத்து தமிழ் பேரறிஞர் சு. நடேசபிள்ளை போன்றவர்களினால் அப்போது 'அறிவுக்கடல்' எனப் பாராட்டுகளைப் பெற்றார் 'கல்கி' அவர்கள்! 'கல்கி' அவர்கள் காலமாவதற்கு மூன்று வருடங்களுக்கு முன்னதாகத் தான் அவர் ஈழம் வந்து இந்தத் தமிழ் விழாவில் கலந்துகொண்டபொன்னான சம்பவம் நடந்தது. ஈழத்து தமிழர்நெஞ்சங்களை விட்டு இரத்தத் தமிழ்விழா என்றுமே அகலமாட்டாது.

தமிழகம் திரும்பியதும் ஈழம்பற்றிதொடர்கட்டுரை எழுதினார்.

## 'கல்கி' நடை

தமிழில் ஒருதனிநடையை ஏற்படுத்தியவர் கல்கி! தமிழ் இலக்கியத்துறையில் இது ஒரு புதிய திருப்பம் என்று என்று கூட இதனைச்சொல்லலாம் எளிய தமிழில் எல்லாருக்கும் விளங்கக்கூடிய நடையில் எழுதினார். இதனால் அவர் எழுத்துக்குத் தனிக்கிராக்கி ஏற்பட்டது.

வரலாற்று நாவல்களை எழுதுவதில் கைதேர்ந்தவர் கல்கி! அடுத்த அத்தியாயம் எப்போது வரும் என்று கல்கி ஆபீஸ் 'கம்போஸிடர்'களே அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் அளவுக்கு அவர் எழுத்து தனிச்சக்தி கொண்டதாக இருந்தது.

எந்த விஷயமென்றாலும், அவர் பேனா தங்கு தடையின்றி எழுதித் தள்ளிவிடும். 'கல்கி' பத்திரிகை அலுவலகத்தில் அவர் இருந்த சமயம் திறமைக்கு மதிப்புக் கொடுத்தார். 'கம்போஸிட்ட'ரை உதவி ஆசிரியராக்கியிருக்கிறார்; நல்ல சிறுகதைகளை எழுதி எழுதி அனுப்பிக் கொண்டிருந்த ஒருவரின் எழுத்தாற்றலைக் கண்டு, தானே அவருக்குக் கடிதம் எழுதி கூப்பிட்டு 'கல்கி'யில் அமர்த்தி உதவி ஆசிரியராக்கினார்!

## உயர்ந்த பண்பு

கல்கியிடம் உயர்ந்த பல பண்புகளும் இருந்தன. அதற்கு ஒரு உதாரணம்: 'கல்கி' வார சஞ்சிகையின் உதவி ஆசிரியர்களிடம் பத்திரிகையிலிருந்துகுறிப்பிட்ட அளவுபக்கங்களை ஒவ்வொருவரிடமும் ஒப்படைத்திருந்தார். அந்தந்தப்பக்கங்களுக்கு அவர்கள் விஷயங்களை எடுத்துப் போடவேண்டும். அவர் மேற்பார்வை செய்வாரேயொழிய, 'இந்தக் கட்டுரையைப்போடு. 'அந்தக் கட்டுரையைப்போடு' என்று திணிக்கமாட்டாராம். தனக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த பக்கங்களில் வேண்டுமானால் தனக்குவேண்டியவற்றைப் போட்டுக்கொள்வாராம். அவர் உயர்ந்த பண்புக்கு இந்த ஒரு உதாரணமே போதுமே!

## அண்ணாவுக்கு பட்டம் வழங்கியவர்

காலஞ்சென்ற தமிழக முதல்வர் அண்ணாதுரையின் பெயருக்குமுன்னால்அழியாது ஒட்டிக்கொண்டிருக்கும் 'அறிஞர்'' என்ற பட்டத்தை வழங்கியவர் இந்த பேரறிஞர் கல்கி தான்! பிற்காலத்தில் அண்ணா ஒரு மேதையாகத் திகழப்போகிறார் என்பதை முன்கூட்டியே கண்டுபிடித்து உலகத்துக்கு அவரை "அறிஞர்" என அறிமுகப்படுத்திய அறிஞருக்கு அறிஞர் இந்தக் கல்கி!

- ஈ. கே. ராஜகோபால் -

கல்கியின் எழுத்திலும் பேச்சிலும் முத்திரைபோல் பதிந்து இருப்பது நகைச்சுவை. பேசிக்கொண்டிருக்கும்போது மற்றவர்களை வயிறு புண்ணாகும்படி சிரிப்பில் ஆழ்த்துவதிலும் கிண்டலாகப் பதில் சொல்வதிலும் 'மன்ன'னாக விளங்கினார்.

இலங்கைக்கு வந்திருந்த சமயம், வானொலிக்கு அளித்த பேட்டியொன்றின்போது நடந்த ருசிகர சம்பவமும், அதனை அடுத்த பின்னணியில் நடந்த சம்பவமும் நினைவுக்கு வருகின்றன.

## கல்கி' சுவை

கொழும்பு ரேடியோவில் கல்கியை பேட்டி கண்டனர் கூடவே பெ. தூரனும் இருந்தார்.

கேள்வி: சிறந்த சிறுகதைகளை எழுதுவது எப்படி?

கல்கி: 'கட்டுக் கட்டாக வெள்ளைத் தாள்களை மேசை அடுக்கி வைத்துக் கொள்ள வேண்டும். பெரிய பேனாவில் மையை நிரப்ப வேண்டும். பின்னர் மேசையின் அருகே கதிரையைப் போட்டுக் கொண்டு இருந்து எழுது எழுது என்று எழுதி குப்பைக் கூடைக்குள் போட்டுக் கொண்டிருக்க வேண்டும். கடைசியில் ஒரு சிறந்த சிறுகதை வெளிவரும்.

இப்படி அவர் கூறிய பதிலை கேட்டுக் கொண்டிருந்த வானொலி நேயர்களுக்கு எப்படியிருந்ததோ தெரியாது, ஆனால் கூட இருந்த தூரனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

வெளியே வந்ததும் 'அப்படி ஏன் பதில் சொன்னீர்கள்' என்று தூரன் கல்கியைக் கேட்டார்.

'வேறு எப்படிப் பதில் சொல்வது' ஒரு கேள்விக்குப் பதில் சொல்ல இரு நிமிடம்தான் ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்குள் 'சிறந்த சிறுகதைகளை எப்படி எழுதுவது? என்பதைச் சொல்லிவிட முடியுமா?' என்று கல்கி விளக்கிவிட்டு 'அதனால் தான் அப்படி வேடிக்கையாகக் கூறிவிட்டேன்' என்றார்.

அழகுத் தமிழுக்கு அழகூட்டி அழகு பார்த்தவர் கல்கி. அழியாத தமிழுக்கு அணிசெய்த 'கல்கி' என்றுமே அழியாத வரம் பெற்றவர்.

ஈழத்தமிழர் நெஞ்சிலும் அவர் என்றும் நிலைத்திருப்பார்.

## சிவஞானபோதம்

யாழ்ப்பாணம், வெள்ளி மாதந்தோறும் சுவாதிநட்சத்திரத்தினத்தன்று [மெய்கண்டதேவர் இறைவன் திருவடி நிழல் அடைந்த தினம்] வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோவிலில் எழுந்தருளியிருக்கும் தெட்சணாமூர்த்தி சந்நிதியில் அபிஷேக ஆராதனையும் சிவஞானபோத சூத்திர பாராயணமும் தொடர்ந்து நடைபெறுகிறது. ஒவ்வொருபேரறிஞர்கள் நாளாந்தம் ஆய்வுரை நிகழ்த்துவர். இம்மாதம் 6-ந் திகதி மாலை 6 மணிக்கு திரு. மு. மயில்வாகனம் அவர்கள்முதலாம்சூத்திரத்தில் ஆய்வுரை நிகழ்த்துவார்.


ஆங்கிலம்

**ஜி. ஸி. இ. (ஓ/எல்)**

இறுதி மீட்டற் பயிற்சிக்கு மாதிரி வினாப்பத்திரங்கள் 1, 2, 3

ஒவ்வொன்றும் /30 சதம்

தயாரிப்பு:

எம். கார்த்திகேசன் பி. ஏ. (ஒனர்ஸ்) லண்டன்

விநியோகம்:

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**

யாழ்ப்பாணம். 1459



இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org